UNIVERSAL LIBRARY
OU_208055
UNIVERSAL LIBRARY

கழக வெளியீடு : ௬௭௯

# தமிழ் கற்பிக்கும் முறை


ஆசிரியர் :

ந. பு. சந்தானகிருஷ்ணன்,
பி.ஏ., எல்.டி.



:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை.

*First Edition.*

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
THIRUNELVELI : & : MADRAS

October 1948.

Printed at the Royal Printing Works, Madras-2.

# முன்னுரை.

இச் சிறு நூலின் போக்கு, தமிழாசிரியர் பலருக்குப் புதியதாகத் தோன்றக்கூடும். மற்றப் பாட ஆசிரியர்கள் இதைப் படித்தார்களானால் அவர்கள் இதில் புதியதாக ஒன்றையும் காண மாட்டார்கள். ஆகவே இதில் தேற்றப்படும் பயிற்றுமுறைக் கொள்கைகள் புரட்சிகரமானவை அல்ல. தமிழும் மற்றப் பாடங்களைப் போலவே கல்விமுறைக் கொள்கைகளைத் தழுவிக் கற்பிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்டு இது எழுதப்பட்டிருக்கிறது.

' தமிழ்ப்பாடம் மற்றப் பாடங்களைப்போலக் கல்விமுறைக் கொள்கைகளைப் பின்பற்றி நடத்தப்படாததன் காரணம், இது வரையில் தாய்மொழிகளுக்கு நம்முடைய பள்ளிக்கூடங்களில் அளிக்கப்பட்டிருந்த தாழ்ந்த இடமும் இங்கிலீஷைத் தலைமேல் தூக்கிவைத்து ஆடிக்கொண்டிருந்த ஆட்டமுமேயாகும். இதனால் தமிழ் மக்களிடையே தமிழறிந்தவர்களின் தொகை குறைந்து, தமிழையும் கல்விமுறைகளையும் ஒருங்கே பயின்ற ஆசிரியர்கள் அகப்படாமல், தமிழ் மட்டும் தெரிந்திருந்தாற் போதும் என்று ஒப்புக்கொண்டு தமிழாசிரியர்களை அமைக்க நேர்ந்தது. அப்படி அமைத்ததிலும் 1926-ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த நிலைமை இப்போதிருப்பதைவிட இன்னும் கேடானதாக இருந்தது. அப்போது ஆசிரியர்களின் தமிழ்ப் பயிற்சிக்குங்கூட ஒரு சான்றுமின்றி அவர்கள் நியமிக்கப்பட்டுவந்தார்கள். வித்துவான் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு 1926-ஆம் ஆண்டிற்குப் பிறகே ஏற்பட்டது. இப்போது கல்வி முறைப் பயிற்சியும் இருந்தால் நலம் என்று ஏற்பட்டிருக்கிறது. எனவே, தமிழ்மொழி தனக்குரிய இடம் பெற்றுவிட்டது. இப்படிப் பெற்ற இடத்தை நிலையாக்கிப் பயன்படுத்திக்கொள்ளுதல் இனித் தமிழாசிரியரின் கடமை.

தமிழ் மொழிப்பயிற்சியைப்பற்றிப் போதுமான நூல்கள் இன்னும் வெளிவரவில்லை. இரண்டொரு சிறு நூல்களே வெளிவந்திருக்கின்றன. பல நூல்கள் வெளிவரவேண்டும். அதுவரையில் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூவைப்போல இச்சிறு நூல் உதவினால் போதும். இதன் குற்றங்குறைகளைக் கண்டு பேராசிரியர்கள் யாராயினும் சிறந்த நூல்களை இயற்றத் தூண்டப்படுவார்களானால், இச் சிறு நூல் வெளியிடப்பட்ட நோக்கம் நிறைவேறியதாகும்.

த. பு. சந்தான கிருஷ்ணன்.

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை. | |
| 1 | முத்தமிழ் ... | 1 |
| 2 | பண்டிதரும் ஆசிரியரும் ... | 2 |
| 3 | தமிழ்ப்பாட நோக்கம் ... | 6 |
| 4 | மொழியும் இலக்கியமும் ... | 9 |
| 5 | ஆழப் படித்தலும் அகலப் படித்தலும் ... | 11 |
| 6 | வாய்விட்டுப் படித்தலும், கண்ணோட்ட (மௌன)ப் படிப்பும் ... | 12 |
| 7 | தமிழும் பிற பாடங்களும் ... | 17 |
| 8 | தமிழ்மொழிப் பயிற்சிகள் ... | 22 |
| 9 | கடிதங்களும் கட்டுரைகளும் ... | 28 |
| 10 | கட்டுரைப் பொருள் ... | 32 |
| 11 | கட்டுரை நடை ... | 35 |
| 12 | பிறமொழிச் சொற்கள் ... | 39 |
| | குறியீடுகள், அச்செழுத்து வகைகள், அச்சுயந்திரம் முதலியவற்றின் உதவி ... | 41 |
| 13 | வாசகப் புத்தகங்கள் ... | 49 |
| 14 | மொழிச்சுவை பரவும் வழிகளும் கருவிகளும் ... | 56 |
| 15 | " வால் மாத்திரம் நுழையவில்லை " ... | 60 |
| 16 | பலவகைத் தொல்லைகள் : பெருவகை ... | 64 |
| 17 | பலவகைத் தொல்லைகள் : சிறுவகை ... | 70 |
| 18 | கட்டுரைத் திருத்த முறை ... | 75 |
| 19 | வருங்காலத் தமிழ் நிலைமை ... | 79 |
| 20 | முடிவுரை : " எங்கள் குயில் ஐயா " ... | 82 |

# தமிழ் கற்பிக்கும் முறை

## 1. முத்தமிழ்

முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகத்தமிழ் என மூவகைப்பட்ட தமிழ் என்பர். தமிழ் கற்கும் முறைகளைக் கருதும்போது முத்தமிழ் என்பதை வேறு மூவகையாகவும் பிரிக்கலாம். அவை கவிஞர் தமிழ், பண்டிதர் தமிழ், ஆசிரியர் தமிழ் என்பன. இப் பிரிவு தமிழ்மொழியை வழங்கும் மூவினத்தவரைப் பொறுத்தது; கற்பிக்கும் முறைகளை ஆராயுங்கால் இது உதவக்கூடும்.

காலவரையைக் கடந்து என்றும் அழியாமல் புகழ்பெற்று நிற்கும் நூல்களை இயற்றியவருடைய தமிழைக் கவிஞர் தமிழ் என்போம். அந்நூல்களின் பொருளையும் நயத்தையும் ஆராய்ந்தறிந்து பொது மக்களுக்கு அவற்றை விளக்கியுரைப்பவருடைய தமிழைப் பண்டிதர் தமிழ் எனக் கருதுவோம். அதே நயத்தை வயதுக்கும் பருவத்திற்கும் ஏற்றபடி சிற்சில நூல்களையும் மற்றும் சில நூல்களின் பகுதிகளையும் துணையாகக்கொண்டு பள்ளிக்கூட மாணவர்களுக்கு எடுத்துரைத்து, தமிழ்மொழியைத் தங்கள் உள்ளக் கருத்தை வெளியிடும் கருவியாகக் கையாள உதவும் தமிழை ஆசிரியர் தமிழ் என்று குறிப்பிடுவோம்; அல்லது பள்ளிக்கூடத் தமிழ் என்றே சொல்லுவோம். இப் பாகுபாட்டில் தமிழ் என்ற சொல் மொழிநடையை மாத்திரம் குறிக்கவில்லை; பொருள், மொழி, முறை முதலிய எல்லாப் பகுதிகளையும் குறிக்கும்.

## 2. பண்டிதரும் ஆசிரியரும்

கவிஞர்களை அவரவர் காலத்தில் மக்கள் அறிந்து போற்றுதல் அரிது. வாழ்க்கையில் நாம் எளிதில் கண்டறியக்கூடியவர்கள் பண்டிதரும் ஆசிரியருமே. இப்போதுள்ள நிலைமையில் இவ்விருவருக்கும் எவ்வகை வேற்றுமையையும் நாம் காணுவதற்கில்லை. இரு இனங்களின் தன்மைகளும் கலந்த ஓர் உருவத்தையே காணுகிறோம்; இருவரையும் பொதுவாகப் 'பண்டிதர்' என்றே சொல்லுகிறோம். விதிக்கு விலக்காக அங்கங்கே ஓரிரு இராமாயண சாஸ்திரிகளையோ, பாரதிகளையோ, பாகவதர்களையோ காணுகிறோம்; என்றாலும், அவர்களுள் இசையரங்கை அடைந்தவர்களை நீக்கினால் மிகுந்தவர் மிகச்சிலரே யாவர்; பண்டிதரைத் தனியினமாகக் கருதத்தக்க எண்ணிக்கையினர் இல்லை எனவே சொல்லலாம்.

பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்பிக்கும் முறை தெளிவுபடுமுன் பண்டிதருக்கும் ஆசிரியருக்கும் இடையே இருக்கவேண்டிய நோக்க வேற்றுமை தெளிவுபடவேண்டும். இது வரையில் தமிழ் கற்பிக்கும் முறையைப்பற்றி வெளிவந்துள்ள இரண்டொரு நூல்களில், பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்பிக்கப்படும் நோக்கங்கள் எடுத்துரைக்கப் பட்டபோதிலும், அவை இக்கலப்புருவங்கொண்ட பண்டித ஆசிரியர்களுக்கு விளங்கும் வகையில் கூறப்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் இந்நூல்களில் கூறப்பட்ட நோக்கங்களுக்கும்

தமது தொழிலைப் பற்றிப் பண்டித ஆசிரியர்கள் கொண்டுள்ள கொள்கைகளுக்கும் ஒரு வகையான தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே தமக்குப் புதுமையான இந்நோக்கங்களைவிடப் பண்டித பரம்பரையைச் சேர்ந்த தம்முடைய முன்னோர்கள் கைப்பற்றியவையும் தமக்குப் பழக்கமானவையுமான சில முறைகளையே இவ்வாசிரியர் கையாளுகின்றனர். பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்பிக்கப்படும் நோக்கங்களைத் தனிமையாக இவர்களுக்கு எடுத்துக் கூறுவதைவிட அவற்றைப் பழந்தமிழ்ப் பண்டிதர்களுடைய நோக்கங்களுடன் ஒப்பிட்டுக் கூறினால் இந்நோக்க வேறுபாடும் பள்ளிக்கூடத் தமிழின் தனிப்பட்ட நோக்கங்களும் ஒருகால் எளிதில் விளங்கக்கூடும் என்ற கருத்துடன் அடியிற்கண்ட அட்டவணை குறிக்கப்பட்டுள்ளது.

| பண்டிதர் | ஆசிரியர் |
| --- | --- |
| **மாணக்கர் :** | |
| (1) பண்டிதரைத் தாமாகத் தேடி வருவோர் | (1) சமூக வழக்கப்படி பள்ளிக்கூடத்தில் பிறரால் திரட்டப்பட்டவர் |
| (2) பண்டிதரால் பரீட்சிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்ட மிகச் சிலர். | (2) பள்ளிக்கூடத்தில் சட்டப்படி சேர்க்கப்பட்ட பலர் |
| **அல்லது** | |
| (3) புராணம் கேட்கவரும் பொதுமக்கள் | (3) பல வகுப்புகள்,* பல வகுப்புப் பிரிவுகள் † |
| (4) வயதும் ஓரளவு பக்குவமும் பெற்றவர். | (4) துள்ளிக் குதிக்கும் சிறுவர். |

* classes or forms. † sections.

**பொருள் :**

பண்டிதர் இட்டப்படி **அல்லது** (புராணமானால்) சபையோர் விருப்பம்

பண்டிதரைக் கலந்து இடப் படினும், வெளியார் இட்ட திட்டம்

**காலவரை :**

மாணாக்கருடைய தேர்ச்சியைப் பொறுத்தது **அல்லது** (புராணமானால்) பொருட் பகுதிக்கும் பண்டிதர் திறமைக்கும் ஏற்றபடி

பள்ளிக்கூட ஆண்டும் அதன் காலப் பிரிவுகளும்

**பொழுது :**

மாணாக்கருக்கும் பண்டிதருக்கும் **அல்லது** சபையோருக்கும் பண்டிதருக்கும் பொருத்தமான வேளை. (புராணமானால்) மாலை அல்லது இரவுப்பொழுது (உடல் அயர்ந்த வேளை)

பிற பாடங்களுக்கிடையில் அமைக்கப்பட்ட மணிப் பொழுது பகற்பொழுதின் சுறுசுறுப்பான நேரம்.

**ஊதியம் :**

மாணாக்கர் அல்லது சபையோர் விருப்பத்திற்கும் சக்திக்கும், பண்டிதர் தமது திறமையைக் காட்டிப் பெறும் மதிப்புக்கும் ஏற்றபடி

ஆசிரியரின் அறிவுப்பட்டயத்தின்படியும் பள்ளிக்கூடத்தில் அமுலிலுள்ள சம்பளத் திட்டத்தின்படியும்

**நோக்கம் :**

தமிழ்நூல் அறிவு

**அல்லது**

**(புராணமானால்)**

(1) பொது அறிவு ‡
(2) நீதிமொழி
(3) பொழுதுபோக்கு

(1) தமிழ்மொழி அறிவு
(2) பொது அறிவைத் தமிழ் மொழியின் வழியாகப் பெறுவதில் பயிற்சி ‡
(3) பல்வேறு வகைகளில் மொழியைப் பயன் படுத்துதல்
(4) தமிழ் மொழிச் சுவை வளர்த்தல்

---

‡ பொது அறிவே முடிவடைந்த நோக்கம் என்பதற்கும் 'பொது அறிவைப் பெறுவதில் பயிற்சி' என்பதற்கும் உள்ள நுண்ணிய வேற்றுமையைக் காண்க.

**கருவிகள் :**

| | |
|---|---|
| ஏட்டுப் பிரதிகள் (பிற்காலத்தில் அச்சுப் பிரதிகள்) | (1) அழகிய படங்களுள்ள அச்சுப் புத்தகங்கள் |
| (காண வசதி இருந்தால்) கல்வெட்டுக்கள் | (2) வகுப்பறை கரும்பலகை, பலநிறச் சுண்ணாம்புக் கட்டிகள் |
| | (3) பெரிய படங்கள், படத் தொகுதிகள் |
| | (4) திரைப்படங்கள் (சினிமா) |
| | (5) ஒலிப்பரவி (ரேடியோ) |
| | (6) கண்காட்சிகளும் காட்சிச்சாலைகளும் |
| | (7) கல்வெட்டுக்களின் படங்கள் |
| | (8) நோட்டுப் புத்தகங்களும் எழுதும் கருவிகளும் |

**ஆராய்ச்சி :**

| | |
|---|---|
| (1) தமிழ்நூல் ஆராய்ச்சி | (1) பிள்ளைகளின் உள்ளத் தன்மை ஆராய்ச்சி |
| (2) தமிழ்மொழி, வரலாறுகளின் ஆராய்ச்சி | (2) பலவகைக் கருத்துகளை விளக்குவதற்கேற்ற மொழி ஆராய்ச்சி |
| (3) தமிழ் இலக்கண ஆராய்ச்சி | (பிற பாட ஆசிரியர்களுடன் கலந்து) |
| (பிறமொழி ஆராய்ச்சியாளர்களுடன் ஒப்பிட்டு) | |

'பண்டிதர்' என்ற ஒரே பொதுச் சொல்லினுல் குறிக்கப்படும் பண்டிதருக்கும் ஆசிரியருக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேறுபாடுகள் எத்தகையன என்றும் எத்தனை என்றும் மேற்கண்ட அட்டவணையிலிருந்து விளங்கும். இவற்றைத் தெளிவாக உணராமல், பண்டிதருக்குப் பொருந்தும் முறைகளை ஆசிரியர் கையாளுதல் வழியை முன்னே கேட்டறியாமல் வழிச்செல்ல முயலுவதுபோலாகும்.

பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் இவ்வுண்மையை உணருவதன்றி, தமிழ் கற்பிக்கும் முறைகளைப்பற்றி நூல்களை இயற்றுவோரும் இந்நோக்க நிலையைக் கருதித் தம் நூல்களைச் சமைப்பாராயின் தமிழ்க்கல்வி முறை இன்றளவும் கண்டிராத உயர்வைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

---

## 3. தமிழ்ப்பாட நோக்கம்

'இரவீந்திர நாத் டாகூர்' என்ற தலைப்பின்கீழ் தமிழ் வாசகப் புத்தகத்தில் காணப்படும் ஒரு பாடத்தின் நோக்கம் என்ன என்று இன்றைய தமிழ்ஆசிரியர் ஒருவரைக் கேட்போம். சற்றும் தயங்காமல் அவர் உடனே 'கற்றோருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்ற நீதியைப் புகட்டல் என்றே சொல்லுவார். வேறொரு நோக்கமும் இல்லையா என்று மறுபடியும் கேட்டால், இரவீந்திர நாத் டாகூரின் வரலாற்றை விளக்குவது மற்றொரு நோக்கம் என்று ஒப்புக்கொள்ளுவார். இவ்விரண்டு நோக்கங்களன்றி வேறு ஏதாவது நோக்கம் உண்டா எனத் திரும்பவும் வற்புறுத்திக் கேட்போமாகில், விடைகூறப் பெரும்பாலும் தயங்குவார். தமிழ்மொழியில் ஒரு வரலாற்றைக் கூறும் முறையை விளக்குதலே இப்பாடத்தின் முதன்மையான நோக்கம் என்பதை உணரத்தவறினதுமன்றி உடனே அதை அவர் ஏற்றுக்கொள்ளுவதும் எளிதன்று.

இந்நோக்கக்குழப்பம் பண்டிதர்—ஆசிரியர் குழப்பத்தின் விளைவுகளில் ஒன்றாகும். முன் பக்கத்திலுள்ள அட்டவணையை நோக்கின், நீதியும் அறிவும் புராணங்கூறும் பண்டிதருடைய நோக்கம் என விளங்கும். பள்ளிக்கூட ஆசிரியருடைய நோக்கம் முதன்மையாக மொழிப்பயிற்சி என்ற உண்மையை உணர்ந்து பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பாடம் கற்பிக்கப்படும் அன்றே அப்பாடம் அதற்குரிய இடத்தைப் பெற்றதாகும்.

பண்டிதர் பாடம் சொன்ன நாளில் 'பீரியட்' பிரிவுகள் இல்லை; நீதியும், வரலாறும், மொழியும் கலந்து கற்பித்தார். இன்றைய பள்ளிக்கூடத்திலோ நீதிக்கு ஒரு 'பீரியட்'*, வரலாற்றிற்கு இரண்டு 'பீரியட்', தமிழ்மொழிக்கு ஐந்து 'பீரியட்' என்று பொழுதை அறுத்துவைத்திருக்கிறார்கள். அந்த ஐந்து 'பீரியட்'களுக்குள் மொழிப் பயிற்சி அளிப்பதே ஆசிரியருடைய நோக்கம். அவற்றுள் ஒரு 'பீரியட்' அல்லது இரண்டு 'பீரியட்' நாம் உதாரணமாக எடுத்துக்கொண்ட 'இரவீந்திர நாத் டாகூர்' பாடத்திற்குரியவையாகும்.

இம்மொழிப்பயிற்சி நோக்கத்தின் உறுப்புகள் எவை? முதல் உறுப்பு, படித்துப் பொருள் அறியும் பயிற்சி. இரண்டாவது, பொருளின் அமைப்பு, ஒழுங்குகளைக் கண்டுகொள்ளுதல். மூன்றாவது,

* வாரத்தில் ஒரு 'பீரியட்' சொல்லிக்கொடுத்து நீதிபோதனை வெற்றிபெறுமா என்பது வேறு கேள்வி; அதை ஆராய இது இடமல்ல.

மொழி நயம் உணருதல். நான்காவதும் இறுதியானதும் இம்மொழி நயத்திற்குக் காரணமாயுள்ள சொற்களையும் அவற்றின் அமைப்பு இலக்கணங்களையும் ஆராய்தல் எனக் கூறலாம். இவ்வாராய்ச்சியுடன் புதிய மொழிப்பயிற்சி இணையும். மொழி நய, சொல்லமைப்பு ஆராய்ச்சிகளைப் பின்பற்றின பயிற்சியே பாடநோக்கத்தின் சிகரமாகும். இத்தொடர் பயிற்சியின்றி ஆராய்ச்சியுடன் நின்றால் நோக்கம் நிறைவுபெற்றதாகாது.

தனிப்பாடங்களின் மொழிப்பயிற்சியின் வகையினும் முறையினும் முடிவில் மாணாக்கர் தமிழ் விருப்பமும், இன்பநுகர்ச்சித் தன்மையும் பெற வேண்டும். "ஒரு மொழியின் சிறந்த நூல்கள் ஆராய்ந்து படிக்கப்படுமுன், அவை மாணாக்கரின் காதலுக்குரியவை ஆகவேண்டும்" எனக் கூறுகிறார் ஜார்ஜ் ஸாம்ஸன் என்பவர் "வகுப்பறையில் மொழிக்கலை" என்ற ஒரு கட்டுரையில்.

# 4. மொழியும் இலக்கியமும்

எம்மொழியிலும் மாணாக்கர் உணர்ந்தறியத் தக்க நிலைகள் இரண்டு உள. முதல் நிலையை 'மொழி' என்றும், இரண்டாவது நிலையை 'இலக்கியம்' என்றும் கூறலாம். இங்கிலீஷில் இவற்றை முறையே 'லாங்க்வேஜ்' என்றும், 'லிட்டரேச்சர்' என்றும் சொல்லுவார்கள். மொழியை மக்களின் பொதுவான தேவைகளுக்கேற்ற அளவில் கையாளும் நிலை மொழிநிலை; அழியாப் புகழ்பெற்ற நூல்களின் நயங்களையும் நுட்பங்களையும் நுகரும் நிலை இலக்கிய நிலை. முன் கருத்திற்கிசைந்த நூல்கள் மொழிநூல்கள்; பின் கருத்திற்கிசைந்தவை இலக்கிய நூல்கள். ஆனால் சில நூல்களும் நூற்பகுதிகளும் இருவகையிலும் சேரும்.

மொழியறிவு முன்னால் ஓரளவு அமைந்தாலன்றி இலக்கியநுகர்ச்சி ஏற்படாது. இவ்விரண்டிற்குமிடையிலோ அல்லது மொழியறிவோடு கூடவோ மொழிச்சுவை பிறக்கவேண்டும். இதைப்பற்றி ஆசிரியர் நினைவிலிருக்கவேண்டியது என்னவென்றால், மொழிச்சுவை பிறக்குமுன் இலக்கிய நுகர்ச்சி உண்டாதல் அரிது என்பதே. ஆனால் தக்க முறையில் இலக்கிய நூல்களின் ஏற்ற பகுதிகளை எடுத்துக் காட்டி மொழிச்சுவையைப் பிறப்பிக்கக்கூடும்.

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுளுருவமாகவே இருப்பதால் இலக்கியநுகர்ச்சி என்பது ஆசிரியர் செய்யுள் பாடத்தை நடத்தும் முறையைப் பொறுத்திருக்கும். அம்முறை மாணாக்கர்களுக்கு மொழியில் விருப்பமுண்டாக்கத் தக்கதாக

இருக்கவேண்டும்; வெறுப்புண்டாக்கத்தக்க முறையில் இருக்கக்கூடாது. உதாரணமாக ஒரு மலர் அளிக்கும் இன்பத்தைப் பெற அதன் மணத்தை நுகருகிறோம்; அதன் அழகைக் கண்டு மகிழுகிறோம்; பல மலர்களைத் தொடுத்துச் சூடிக்கொள்ளுகிறோம் அல்லது பிறருக்குச் சூட்டி அதைக்கண்டு களிக்கிறோம். அதை இதழ் இதழாகப் பிரித்து இன்பம் உணர்வதில்லை. ஆராய்ச்சியாளர் சிலர் அவ்வகையில் இன்பம் பெறக்கூடுமென்றாலும், பொதுவழக்கம் அது அன்று. மலர் அளிக்கும் இன்பத்தைப் பெறுவதைப் போலவே இலக்கியங்களின் இன்பத்தையும் பெறும் வழியை ஆசிரியர் அறிவிக்கவேண்டும். மாணுக்கர்களுக்கு மலரின் அமைப்பை விளக்குமுன் அதன் மணத்தை அவர்கள் நுகரச் செய்யவேண்டும்.

இலக்கிய இன்பம் நுகர விரும்புவோர் தாமே ஓரளவு தக்க மொழிப்பயிற்சி பெற்றிருந்தாலன்றி அவ்விருப்பம் நிறைவேறாது. ஆகவே இலக்கியத்திற்கு அடிப்படையாயுள்ளது மொழி. அம்மொழியைச் சுவையுடன் மாணுக்கர் கற்கவேண்டும். மொழியும் இலக்கியமும் வெவ்வேறு நிலைகள் என்றும், சொற்ப அளவிலாவது மொழிப் பயிற்சியின்றி இலக்கிய நுகர்ச்சிபிறக்காது என்றும், நேரிடையாகச் செயற்கை முறையில் இலக்கண விளக்கத்தால் மாத்திரமே இலக்கிய நுகர்ச்சியூட்ட முயலுதல் மாணுக்கருக்கு மொழியின்பால் வெறுப்பளிக்க நேரும் என்றும் ஆசிரியர்கள் உணரத்தகும்.

## 5. ஆழப்படித்தலும் அகலப்படித்தலும்.*

மொழிப்படிப்பில் 'டீட்டெய்ல்ட்,' 'நான்டீட்டெய்ல்ட்' என இருவகைகள் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை முறையே ஆழப்படித்தல், அகலப்படித்தல் எனலாம்.

ஆழப்படித்தலில் தமிழ்ப்பாட நோக்கம் என்ற முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட நோக்கத்தின் நான்கு உறுப்புகளும் ஏறக்குறையச் சமமான இடமும், மொழிப்பயிற்சி சற்றே முதன்மையான இடமும் பெறும். அகலப்படித்தலில் இவ்வுறுப்புகளின் முதன்மை வேறுபடும்; பொருளறிவு பெறும் பயிற்சி பெரும்பாலும் முதன்மையாகும். மற்ற உறுப்புகள் வெளிப்படையாக வற்புறுத்தப் படாவெனினும், உள்நோக்கமாகவும் மறைமுகமாகவும் அமையும். அகலப்படித்தலை ஒட்டிய பயிற்சிகள் முற்றிலுமே பொருளறிவுபெறும் முறையைப் பொறுத்தவையாக இருக்கவேண்டும்.

அகலப்படித்தல் அதன் பெயருக்கேற்ப விரிவாக இருக்க வேண்டும். விரிவாகப் படிக்க வேண்டுமானல் விரைவாகப் படிக்கும் முறை ஒன்று தேவையாகும்.

தமிழ்க்கல்வி முறையில் இதுவரை ஆழப்படித்தலுக்கும் அகலப்படித்தலுக்கும் வெவ்வேறு படிக்கும் முறைகள் பலரறிய எடுத்துக்கூறப்படவில்லை.

---

* வித்துவான் திரு. ச. ஆறுமுக முதலியார் இவற்றை முறையே ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு என்று கூறுகிறார்.

ஆனால் இவற்றை அனுபவத்திலிருந்தே தெரிந்து கொள்ளக்கூடும். ஆழப்படித்தல் ஓரளவில் வாய் விட்டுப்படித்தலில் அடங்கியதாகும்; எனினும் முற்றி லும் வாய்விட்டுப் படித்தலாக இருக்கத் தேவை யில்லை. அகலப்படித்தல் பெரும்பாலுமோ முற்றி லுமோ மௌனப்படிப்பு அல்லது கண்ணோட்டப் படிப் பாகும்; இதுவே விரைவாகப் படித்துப் பொரு ளுணருதலுக்கு ஏற்றமுறை என ஆராய்ச்சிகளால் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே ஆழப்படித்தல், அகலப்படித்தல் என்பவற்றிற்கேற்ப வாய்விட்டுப் படிப்பும் மௌனப் படிப்பு அல்லது கண்ணோட்டப்படிப்பும் தமிழ்க்கல்வி முறையில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆழப் படித்தலின் நோக்கத்தின் முதல் உறுப்பாகிய பொருளுணர்தல் பெரும்பாலும் கண்ணோட்டம் அல்லது மௌனப்படிப்பினாலேயே நிறைவேறத் தகும்.

---

## 6. வாய்விட்டுப் படிப்பும் கண்ணோட்ட (மௌன)ப்படிப்பும்

வாய்விட்டுப் படித்தல் ஏற்பட்ட காரணங்களை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

இவை (1) வரிவடிவங்களை ஒலிவடிவங்களாக அடை யாளம் அறிந்ததன் திருத்தத்தை உணர் தல்;

(2) தனிவடிவங்களைக் கூட்டிச் சொற்களாக ஒலித்தல்;

(3) படிப்பறிவுள்ளவர்கள் ஏட்டிலிருந்து படிப்பதை படிக்கத்தெரியாதவர்கள் தொடர்ந்தறிய உதவுதல்;

(4) படிப்பதை மனப்பாடம் செய்தல்.

முதல் இரண்டு காரணங்களும் படிப்புக்கு அடிப்படையாக என்றும் அழியாமல் நிற்பவை. மற்ற இரண்டு காரணங்களும் இப்போதைப்போல மலிவான அச்சுப்புத்தகங்கள் இல்லாமலும், மக்களில் பெரும்பான்மையோர் படிப்பறிவு இல்லாமலும் இருந்த பண்டைக் காலத்தில் படித்தவர்கள் தம் படிப்பைத் தம்மைப்போல் படித்திராத பிறருக்கு உதவும்பொருட்டுக் கைக்கொண்ட முறைகளென அறியலாம். இவ்விரு காரணங்களும் இந்நாட்களில் எங்கெங்கே எந்த அளவுக்கு இன்னும் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு வாய்விட்டுப் படித்தலில் நமது பள்ளிக்கூட மாணாக்கர்களுக்குப் பயிற்சி தேவையாகும்.*

ஆகவே ஆரம்ப நிலையில் மட்டும் வாய்விட்டுப் படிப்புத் தேவை என்றும், பிற்காலப்படிப்பில் அப்பயிற்சி தேவையில்லை என்றும் கூறும் மேல் நாட்டுக் கொள்கையைத் தமிழ்நாட்டவர் முற்றிலும் பின்பற்றத்தக்க காலம் இன்னும் வரவில்லை என்பதை ஆசிரியர்கள் உணரவேண்டும். மேல்நாட்டுக் கல்வி முறைகளை நாம் நம் நாட்டு நிலைமையைக் கருதியே கைக்கொள்ள வேண்டும் என்பதற்கு இது ஓர் உதாரணமுமாகும்.

* இப்போது விரிவாகக் கையாளப்படும் ஒலிப்பரவியின் உதவியைக்கொண்டு பேசுவதற்கும் வாய்விட்டுப் படிக்கும் பயிற்சி தேவையாயிருக்கிறது.

உயர்நிலைத் தமிழ்க் கல்வியில் வாய்விட்டுப் படித்தலின் இவ்விரு காரணங்கள் எப்போதும் ஆசிரியர் நினைவிலிருக்க வேண்டும். இந்த நிலையில் வாய்விட்டுப் படிப்பதின் நோக்கம் பொருளறிவு அன்று என்பதையும், பிறருக்குப் பொருள் உணர்த்துதலும், படிப்பவர் மனப்பாடம் செய்தலுமே என்பதையும் தமிழாசிரியர்கள் மறக்கலாகாது. பிறருக்குதவும்பொருட்டே இப்பயிற்சி தேவை; ஆதலால் பயிற்சிமுறை இந்நோக்கத்திற் கிணங்க அமைக்கப்பட வேண்டும். அதாவது வகுப்பு மாணவர்களை ஊர்மக்கள் கூட்டம் ஒன்றைப்போலக் கருதி, பாடம் படிக்கும் மாணவனைப் படிக்கச்சொல்லவேண்டும்; அல்லது, ஒலிப்பரவியின் நுட்பச் செவியின் ('மைக்'கின்) எதிரில் நின்று படிப்பதைப்போல் படிக்கச்சொல்லவேண்டும்.

அன்றியும் உயர்நிலைப்படிப்பில் உணர்ச்சியுடன் வாய்விட்டுப்படிக்கும் திறமை எல்லா மாணாக்கர்களுக்கும் ஒருங்கே அமையாது; ஆகையால் இத்திறமைதோன்றும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சியும், இது எளிதில் தோன்றாத மாணவர்களுக்கு ஏற்ற துணையும் ஆசிரியர் அளிக்கவேண்டும். பின்னவர்களுள் துணை பெற்றும் தேறாத மாணவர்களை இதில் வற்புறுத்தாமல், தமது தன்மைக்கேற்ற வேறு திறமைகளில் ஊக்கப் படுத்தவேண்டும்.

மாணாக்கர்களை ஒருவர் பின் ஒருவராக வகுப்பில் பாடத்தை வாய்விட்டுப் படிக்கச் சொல்லுதல் மொழிப் பயிற்சி முறைகளுக்கு இசைந்ததன்று.

பிறமொழி ஆசிரியர்களிடமும் இவ்வழக்கத்தைக் கண்டு டி'ஆர்ஸி தாம்ஸன் என்ற ஒருவர். 'ஒரு பள்ளியாசிரியர் பகற்கனவுகள்' என்னும் நூலில் கூறுகிறார்: "வாசிப்பை மந்தமும் உணர்ச்சியற்றதுமாகச் செய்து, மாணுக்கர் மனத்தில் நூல்கள்பால் வெறுப்புண்டாக்கத்தக்க செயல் இவ்வரிசை முறையான வாய்விட்டுப் படித்தலைப்போன்ற வேறொன்றுவுமில்லை."

பொருளறிவுக்கென வாய்விட்டுப் படித்தல் பொருத்தமாகாது. பொருளறிவுக்கேற்ற விரைவும் விரிவும் அமைந்த வாசிப்பு கண்ணேட்டப் படிப்பேயாகும். இது மௌன வாசிப்பு என்றும் வாய்க்குட்படித்தல் என்றும் பயிற்றுமுறைப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'மௌன வாசிப்பு' என்பது இங்கிலீஷில் இதைக் குறிக்கும் சொற்றொடரை மொழிபெயர்த்து வந்த சொல். 'வாய்க்குட் படித்தல்' என்ற தொடர் 'மௌன வாசிப்பு' என்பதிலுள்ள வடமொழியைப் பெயர்த்து வந்ததெனத் தோன்றுகிறது. இரு தொடர்களையும்விடப் பொருத்தமாக இவ்வாசிப்பின் தன்மையை விளக்கும் தொடர் 'கண்ணேட்டப்படிப்பு' என்றே கூறலாம்.

வாய்விட்டுப் படித்தலின் காரணங்களால் உணர்த்தப்பட்ட நாட்டு நிலைமையினலும், அந்நிலைமையினல் வந்த பண்டித வழக்க முறையினலும், கண்ணேட்டப்படிப்பு இதுவரையில் நம் பள்ளிக்கூடங்களில் போதுமான ஊக்கம் பெறவில்லை. புதுமுறையில் எழுதப்பட்டவை என்று முதலேட்

டில் குறிக்கப்பட்ட பாடப்புத்தகங்களிலுங்கூட, இக்கண்ணோட்டப்படிப்பு ஏதோ ஓர் அரிய பாடமாகத் தனித்துத் தரப்பட்டிருப்பதைக் காணலாம். இப்படித் தரப்பட்டிருப்பதால் இரண்டு தவறான எண்ணங்கள் ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடும். அவை, முதலாவதாக, ஒவ்வொரு பாடமும் ஒரு முறை கண்ணோட்டமாகப் படிக்கப்படவேண்டும் என்பதை மறத்தல்; இரண்டாவதாக, கண்ணோட்டப்படிப்பின் அளவு புத்தகத்திலடங்கிய பொருளின் ஒரு சிறு பகுதியே என்றிருத்தல். ஆசிரியர் இத்தவறான எண்ணங்களுக்கு இடங்கொடாமல் தம் மாணாக்கர்களைக் கண்ணோட்டப்படிப்பில் ஊக்கப்படுத்த வேண்டும்.

கண்ணோட்டப்படிப்பைப் பெருக்கினாலன்றி மாணாக்கர்களிடம் இப்போது காணப்படும் பொதுப்படிப்பு எனப்படும் அகலப்படிப்பின் குறைவை நிறைவாக்க இயலாது; செய்திப்பத்திரிகைகளையும் பல்வேறு வகையான நூல்களையும் அவர்கள் ஊக்கத்துடன் படிக்கச்செய்ய முடியாது. அன்றியும் கண்ணோட்டப்படிப்புத் திறமையில்லாவிட்டால் மாணாக்கர்கள் மொழிப் பாடங்களன்றி மற்ற பல அறிவுப்பாடங்களையும் திறமைப்பாடங்களையும் கற்க வல்லவராகமாட்டார்கள்; அவ்வவ்வாசிரியர் சொல்லுவதை எழுதி மனப்பாடம் செய்து திருப்பிச் சொல்லும் அளவுக்கே அப்பாடங்களைக் கற்பார்கள்.

கண்ணோட்டப்படிப்பின் பயிற்றுமுறையே ஒரு தனி இயல்புடையது. அதை விரிவாக இங்குக்

கூற இடமில்லை. முதல் வகுப்பில் பொருள்களின் பெயர்கள் எழுதப்பட்ட சிறு அட்டைத் துண்டு களைப் பிள்ளைகள் கண்ணோட்டமாகப் படித்து அவற்றை அவ்வப் பொருள்களின்பேரில் வைக்கும் பயிற்சி முதல் பொருளறிவுச் சோதனைகள்* எனப் படும் பயிற்சிகள்வரை படிப்படியாகப் பல பயிற்சி கள் உள. இவற்றையெல்லாம் தமிழ் ஆசிரியர்கள் முற்றிலும் அறிந்து தாம் கற்பிக்கும் வகுப்புகளுக் கேற்பக் கண்ணோட்டப்படிப்புப் பயிற்சிகளை வழங்கவேண்டும்.

---

## 7. தமிழும் பிற பாடங்களும்

பள்ளிக்கூடங்களில் ஒவ்வோர் ஆசிரியரும் தமது பாடத்தில் குறிப்புகளைச்† சொல்லி மாணாக் கர்களைத் தம் குறிப்புப்புத்தகங்களில் அவற்றை எழுதிக்கொள்ளச் செய்வதும், மாணாக்கர்கள் அக் குறிப்புகளை மனப்பாடம் செய்து விடையளிப்பதும் இக்காலத்துப் படிப்பைப்பற்றி நாம் எல்லோரும் அறிந்த ஒரு தன்மை. ஆனாலும், இவ்வழக்கம் ஒரு பெரும் குறை என்று நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். இக்குறையை நீக்க வேறு வழியில்லை என்று நினைக் கிறோம். ஆனால், இதன் காரணங்களைச் சற்றேற ஆராய்ந்திருப்போமா? சிலர் ஆராய்ந்திருக்கக் கூடும்; பலர் ஆராய்ந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆராய்ந்த அளவுக்குங்கூட பலரறிய இதன் காரணங்களை ஒருவரும் வெளியிட்டிருப்பதாகத் தோன்றவில்லை.

---

* Comprehension tests. † Notes.

'கணக்கு ஆசிரிய'ரைக் கேட்டுப் பார்ப்போம். அவர் மாணுக்கர்களை எழுதிக்கொள்ளச் சொல்லும் குறிப்புகள் எவை? ஏன்?

பிள்ளைகளுக்குக் கணக்கு 'விளங்க வில்லை' யாம்; ஆகையால், அவர் கணக்கைத் தாமே படித்து அதன் முக்கிய அமிசங்களைக் குறித்துக் கொள்ளச் சொல்லுகிருர். உடனே கணக்கு 'விளங்கி' விடுகிறது; விடையைப் பிள்ளைகள் கணக்கிடுகிருர்கள்.

முன்காலத்தில், இங்கிலீஷில் இருந்த கணக்குத் தான் 'விளங்கவில்லை' என்ருல், இப்போதுள்ள தமிழ்க்கணக்குங்கூட ஏன் 'விளங்கவில்லை?' இதற்குக் காரணம் கணக்குக்குப் பொருத்தமான மொழிப்பயிற்சியின் குறைவேயன்ருே? கணக்கில் வரும் அளவுகள், தொகைகள் முதலியவை அடங்கின பொருளையும் கணக்கில் வழங்கப்படும் மொழியையும் மாணுக்கர் தம் தமிழ்ப்பயிற்சியில் அறிந்திலரன்றே!

"அப்படியாளுல், தமிழ்ப்பாடத்தில் கணக்குங் கூடச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்கிறீரோ?" எனக் கேட்கிருர் தமிழ்ப்பண்டிதர்.

**உரைநடையில் பலவகைகளுண்டு. அவற்றில் மாணுக்கர்கள் தம்முடைய கல்வித் தேவைக்கேற்ற சிலவற்றையாவது அறிந்து பழகவேண்டும். கணக்காகவே இல்லாவிட்டாலும் கணக்குகளில் வழங்குவதைப் போன்ற நடையுள்ள பாடங்கள் இருக்கக்**

கூடாதா? அவற்றில் ஒன்றிரண்டு சில தமிழ்ப் புத்தகங்களில் காணப்படவில்லையா? அவற்றின் நடையை ஆராயக்கூடாதா? அவ்வகைப்பட்ட பாடங்கள் இன்னும் இரண்டொன்று சேர்க்கப் படலாகாதா?

I

இனி, பூகோள வரலாற்று ஆசிரியர்கள் ஏன் குறிப்புகளைச் சொல்லி எழுதச் செய்கிறார்கள் என்று நோக்குவோம்.

எத்தனையோ நிலப்படங்களும் சித்திரப் படங்களும் காட்டிச் சொல்லிக்கொடுத்து, நினைவுக்காக அட்டவணையும் குறித்துக்கொடுத்ததைத் தொடர்ந்து நான்கு வாக்கியங்களில் பிள்ளைகளால் பிழையில்லாமல் எழுதமுடியவில்லை என்று முறையிடுகிறார் பூகோள ஆசிரியர். அதனால், அவர் அட்டவணையையும் நிலப்படத்தையும் தழுவி 'நோட்ஸ்' கொடுக்கிறார்.

புத்தகத்தில் கஜினி மாமூதின் படையெடுப்பைப்பற்றி மூன்று பக்கங்கள் இருப்பதைப் பிள்ளைகள் பரீக்ஷையில் பதினைந்து வரிகளில் எழுதத் தெரியவில்லையாம்; ஆகையால் வரலாற்று ஆசிரியர் 'நோட்ஸ்' கொடுக்கவேண்டி யிருக்கிறதாம். பிள்ளைகளிடம் காணப்படும் இந்தக் குறை மெய்யாகவே வரலாற்றுப் பாடத்தைச் சேர்ந்த குறைதானா? மூன்று பக்கங்களில் படித்ததன் பொருளை உள்வாங்குவதும், அதைப் பதினைந்து வரிகளில் எழுதுவதும் மொழித்திறமையல்லவா?

இத்திறமையை அளிப்பது யார் கடமை? வரலாற்று ஆசிரியருடையதா, தமிழாசிரியருடையதா?

இயற்கைப்பாட ஆசிரியர் கூறும் குறை என்ன? இயற்கை நிகழ்ச்சிகளையும் செயற்கைச் சோதனைகளையும் மாணாக்கர்களுக்குக் கண்கூடாகக் காட்டுகிறாராம். அப்படிச் செய்தும் அவர்கள் கண்ணால் நேரில் கண்டவற்றை நான்கைந்து வாக்கியங்களில் தெளிவாக எழுத முடியவில்லை என்கிறார். அதற்காகத் தாமே அவ்வாக்கியங்களைச் சொல்லி மாணாக்கர்களைக் குறித்துக்கொள்ளச் சொல்லுகிறார். "கண்ணால் கண்டவற்றைத் தாய்மொழியில் எழுதமுடியாமல் இருக்கச்செய்யும் தாய்மொழிப்படிப்பு என்ன படிப்பு?" என்று கேட்கத் தோன்றவில்லையா?

"ஆனால், நானும் தமிழ் வகுப்பில் குப்பியும் குழாயும் கொண்டுவந்து, 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்யவேண்டுமோ?" என்று பதறுகிறார் தமிழாசிரியர்.

மேற்கூறப்பட்ட உதாரணங்களின் நோக்கம் தமிழாசிரியர் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும் என்பதன்று; எல்லாப் பாடங்களின் நுட்பங்களையும் அறிந்திருக்கவேண்டும் என்பதுமன்று. பள்ளிக்கூடத்தில் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் பிற பாடங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கவே இவ்வுதாரணங்கள் கூறப்பட்டன.

மொழிப்பயிற்சி எல்லாப் பாடங்களுக்கும் அடிப்படையான பொதுப்பயிற்சி என்றும், தமிழ்ப்பாடம் தனிப்பட்ட ஒரு பாடம் அன்று என்றும் தமிழாசிரியர் உணர்தல் அவசியம். மொழிப்பயிற்சி நிறைவானதாக இருந்தால் மற்றெல்லாப் பாடங்களும் உயிர்பெறும். மொழிப் பயிற்சியின் குறைவுகளால் மற்றப் பாடங்கள் உயிரிழந்து 'சொல்வதெழுதல்' பாடங்களாகின்றன.

இக்குறையை நீக்க, தமிழ்ப்பாடப் புத்தகங்களின் பொருள் போதுமான விரிவும் வேறுபாடும் உள்ளதாக இருக்கவேண்டும். அவற்றின் தமிழ் நடையும் பொருளுக்கேற்ற நடையின் எடுத்துக் காட்டாயிருக்கவேண்டும். தமிழாசிரியர் தமிழ் மொழி கையாளப்படும் பல துறைகளையும் பற்றி ஓரளவிலாவது அறிந்திருக்கவேண்டும்; விசாலமான பொது அறிவு பெற்றவரா யிருக்கவேண்டும்; உலகப்போக்கை அவ்வப்போது தொடர்ந்து அறிந்துவரவேண்டும்.

பாடங்களின் பொருளையும், சொற்பொருள் இலக்கணத்தையும் கற்பித்தல் மாத்திரமே தமிழாசிரியர் கடமையன்று. தமிழ் மொழியைப் பற்பல துறைகளில் வழங்கப் பயிற்றுவதே தமிழாசிரியருடைய நோக்கமாயிருக்கவேண்டும். மொழிப் பயிற்சிகள் பலவகைப் பட்டனவாக இருத்தல் இன்றியமையாதது. அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுதல், சொல்லிலக்கணங் கூறுதல், சந்தி பிரித்துச் சொல்லுதல், செய்யுள்களை அன்வயப்படுத்திப் பதவுரை பொழிப்புரை கூறுதல் மாத்திரம் போதா.

## 8. தமிழ் மொழிப் பயிற்சிகள்

தமிழாசிரியர் பலருக்கு இக்காலத்தில் 'மொழிப் பயிற்சி' எனப்படுவது இன்னதென்றே தெரியாது. அவர்கள் அளிக்கும் மொழிப்பயிற்சி என்பது பெரும்பாலும் அருஞ்சொற்பொருள், இலக்கணம், சந்தி, அன்வயம், பதவுரை, பொழிப்புரை முதலியவற்றைக் கூறுதலுக்குள் அடங்கும். மாணக்கர் தமது உள்ளக் கருத்துகளை உணர்ச்சியுடன் தமிழில் வெளியிடும் நிலைக்கு வர இப்போலிப்பயிற்சி சற்றும் உதவாது. பயிற்சி பெருத காரணத்தால் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல் அறிந்தோ அறியாமலோ மனப்பாடம் செய்தவற்றைத் திருப்பிச்சொல்லவும் எழுதவுந் தான் மாணக்கர்களுக்குத் தெரியும். ஒருவர் வேண்டுவதை மற்ருெருவருக்கு நான்கு வரிகளில் ஒரு கடிதம் எழுதத்தெரியாத மாணவர்கள், 'கற்பு' என்ற தலைப்புக்கடியில் மூன்று நான்கு பக்கங்கள் எழுதுவார்கள். இந்த நிலைமையைத் திருத்த முதல் வகுப்பிலிருந்தே பலவகை மொழிப்பயிற்சிகள் தேவை. இவை மாணக்கரின் தற்கால பிற்கால வாழ்க்கையில் பயனளிக்கத் தக்கவையாகவும், நாட்டின் சமூக வாழ்க்கையையும், கல்வி, கைத்தொழில், பயிர்த்தொழில், அரசியல் முதலிய பல துறைகளிலும் உலகப்போக்கையும் தழுவினவையாகவும் இருக்கவேண்டும்.

இங்கிலீஷில் 'ஸீட்வர்க்,' 'டெஸ்க்வர்க்' என்று சொல்லப்படும் பயிற்சித் தொகுப்புகளில் மொழிப்

பயிற்சியின் உதாரணங்களைக் காணலாம். தமிழில் இவ்வகையான வெளியீடு இதுவரையில் ஒரே வரிசைதான் இருக்கிறது. மூன்று புத்தகங்கள் கொண்ட இவ்வரிசை 'புதுமுறைத் தமிழ் அப்பியாசங்கள்' என்ற பெயருடன் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸாரால் வெளியிடப்பட்டுள்ளது. இது மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வகுப்புகளுக்கு மாத்திரமே இயற்றப்பட்டது. 'பாரதி தமிழ் வாசக'ங்களிலும் இவ்வகைப் பயிற்சிகள் சிலவற்றைக் காணலாம். மொழிப்பயிற்சிகள் அனைத்தும் இவற்றில் சேர்க்கப்படவில்லை. ஆனால், இவற்றை வழிகாட்டியாகக் கொண்டு ஆசிரியர்கள் தாமே தக்க பயிற்சிகளை வகுக்கவேண்டும்.

மேற்சொன்ன உதாரண வெளியீடுகளன்றி மொழிப் பயிற்சிகளைத் தொகுக்க அடிப்படையாயுள்ளது, மாணாக்கர்களின் வாழ்க்கைத் தேவைகளையும் மனப்போக்கையும் பொறுத்த ஆராய்ச்சியே. சிறு குழந்தைகளுக்கு,

| | |
|---|---|
| பூவே பூ.—என்ன பூ? | கற்பூரவாழை.—என்ன கற்பூரம்? |
| புளியம்பூ.—என்ன புளி? | ரசகற்பூரம்.—என்ன ரசம்? |
| காட்டுப்புளி.—என்ன காடு? | மிளகுரசம்.—என்ன மிளகு? |
| பாலக்காடு.—என்ன பால்? | வால் மிளகு.—என்ன வால்? |
| கள்ளிப்பால்.—என்ன கள்ளி? | நாய் வால்.—என்ன நாய்? |
| இலைக்கள்ளி.—என்ன இலை? | மரநாய்.—என்ன மரம்? |
| வாழையிலை.—என்ன வாழை? | மாமரம்.—என்னமா?—அம்மா |

என்பதைப் போன்ற தொடர்கூற்றுகளும், செவிலிப் பாட்டுகளும், விடுகதைகளும் அளிக்கும் இன்

பத்தைப் பெற்றோர் கண்டு களிப்பதைப்போல ஆசிரியரும் ஏன் கண்டு களிக்கக்கூடாது? இப்போது வெளிவரும் பல பாடப் புத்தகங்களில் இவற்றில் சிலவற்றைக் காணலாம். இது தமிழ்க் கல்விக்கு ஒரு நல்ல அறிகுறியாகும். எனினும், பெரும்பாலான புத்தகங்கள் இவற்றோடு நின்று விடுகின்றன. புத்தக ஆசிரியர்களும் பள்ளிக்கூட வகுப்பு ஆசிரியர்களும் இவ்வகைப் பயிற்சிகளைப் பெருக்கவேண்டும்.

பயிற்சிகள் எல்லாவற்றையும் விரிவாகக் கூற இங்கு இடமில்லை. ஒரு வகையான பயிற்சி, பல எழுத்துக்களைக் கலந்துகொடுத்து அவற்றிலிருந்து சொற்களாக்கச் செய்தல். உ-ம். — மப்ரவேபம் (வேப்பமரம்), சுமந்த சோரம் (சோமசுந்தரம்) முதலியவை போன்றன. மற்றொருவகை பல சொற்களைக் கலந்து கொடுத்து அவற்றின் பெரும்பாலான பொதுத் தன்மையை உணர்ந்து அத் தன்மை யில்லாதவற்றை விலக்கச்செய்தல். உ-ம். தேங்காய், பழம், பூ, கத்தி, கற்பூரம்—இவற்றில் பொருத்தமற்ற சொல் எது? (கத்தி). வேறொரு வகைப் பயிற்சி ஒரு வாக்கியத்தின் சொற்களை ஒழுங்கு மாற்றிக்கொடுத்து ஒழுங்காக்கச் செய்தல். எழுத்துக்களால் சுருக்கிக் குறிக்கப்பட்ட பெயர்களை விரித்துக்கூறுதல் மற்றொரு பயிற்சி. உ-ம். அ. இ. ரே. (அகில இந்திய ரேடியோ); சு. ம. கட்சி (சுய மரியாதைக் கட்சி). இவையெல்லாம் எளிய பயிற்சிகள். இலக்கண இலக்கியங்களைத் தழுவி இன்னும் நுட்பமான பயிற்சிகளையும் தொகுக்க்

லாம். செய்வினை செயப்பாட்டு வினைகளைத் தழுவிய வாக்கிய மாறுபாடுகள், தற்கூற்றுப் பிறர் கூற்று மாறுபாடுகள் முதலியன இவ்வகைப்பட்டவை. நீண்ட வாக்கியங்களைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தல், சிறு வாக்கியங்களை ஒன்றாகத் தொகுத்தல் முதலியனவும், காலக்குறிகளைத் தக்க இடங்களில் இடுதலும் மற்றும் சிலவகைப் பயிற்சிகளாகும்.

இப்பயிற்சிகளில் சிலவற்றின் உதவியால் மொழிநயம், நடை நுட்பங்கள் முதலானவற்றை மாணாக்கர்கள் உணரும்படி செய்யலாம். உதாரணமாக, 'சீதையைக் கண்டேன்,' 'கண்டேன் சீதையை' என்ற இரண்டிற்கிடையிலும், 'இது என் கோடாலி' 'இதுவே என் கோடாலி' என்ற இரண்டிற்கிடையிலும் உள்ள உணர்ச்சி வேற்றுமையைக் காணச் செய்து, இவ்வகை மாறுபாடுகளைத் தழுவி உணர்ச்சி தோன்றாத வாக்கியங்களை உணர்ச்சி விளங்கும்படி மாற்றச் செய்யும் பயிற்சிகளைக் கொடுக்கக்கூடும். ஒரு வாக்கியத்திலுள்ள சொல் வரிசையைப் பலவிதமாக மாற்றுவதால் உண்டாகும் பொருள் வேறுபாட்டையும் அழுத்த மாறுபாட்டையும் ஆராயும் பயிற்சிகள் பிற்காலத்தில் மாணாக்கர்கள் எழுதுவதைத் தெளிவாகவும் உணர்ச்சி விளங்கவும் எழுத அளவற்ற பயனளிக்கும். இவ்வகைப் பயிற்சிகளிலிருந்து உண்டாகும் செய்யுள் நய அறிவுக்கும், சொல்லிக் காட்டி நயம் காணுவதற்கும் வித்தியாசமில்லையா ?

இலக்கண இலக்கிய உருவங்களைத் தழுவிய பயிற்சிகளன்றி, முற்காலத்தில் 'சித்திரக் கவி' களுக்கே வழங்கப்பட்ட பலவகை உருவ, அட்ட வணை அமைப்புகளடங்கிய பயிற்சிகளும் பயன் தரத்தக்கவை. இவற்றில் மிக எளிய பயிற்சியாகச் சில சொற்களையோ பெயர்களையோ கொடுத்து அவற்றை அகர வரிசையில் எழுதச் சொல்லலாம். பயிற்சி எளியதேயாயினும் இதைத் தொடர்ந்து அகராதியைப் பயன்படுத்தும் முறையைக் கற்பிக்க இது உதவியளிக்கும். இக்காலத்தில் பலர் விரும் பிப் பொழுதுபோக்கும் குறுக்குச் சொல் புதிர்கள் (க்ராஸ் வர்ட் பஸ்ல்ஸ்) சித்திரக்கவி வகையை ஒரு வாறு சேருமன்றோ? அட்டவணைகள் கணக்கு முதலான பிற பாடங்களில் மொழிப் பயிற்சியைப் பயன்படுத்த உதவும்.

அச்சுப் பிழைகளைத் திருத்தும் பயிற்சியும், கீழ் வகுப்புக்களில் எளிய முறையில் காலக்குறிகளை இடப் பயின்றதைத் தொடர்ந்து மேல் வகுப்புக் களில் மாணுக்கர் தாம் எழுதும் கடிதங்கள் கட்டுரைகளிலும் அக்குறிகளை ஏற்றபடி கையாளும் பயிற்சியும் உயர்நிலைக்கு ஏற்ற மொழிப் பயிற்சி களில் சிலவாகும். "நேற்று மாமனர் வீட்டுக்குப் போயிருந்தபோது அவர் என்னை அங்கு இருந்து சாப்பிட்டுப் போகச் சொன்ஞர்" என்று எழுதுவ தற்கும், "நேற்று மாமனர் வீட்டுக்குப் போயிருந் தேன்; இருந்து சாப்பிட்டுப் போகச் சொன்ஞர்" என்று எழுதுவதற்கும் உள்ள வேற்றுமையை மாணுக்கர்கள் அறியவேண்டாமா?

கீழ்வகுப்புக்களில் படம்பார்த்துக் கதை சொல்லும் மொழிப்பயிற்சி இப்போது அந்நிலையிலேயே நின்றுவிடுகிறது. ஆனால், இக்காலத்து வாழ்க்கையிலோ எத்திசையை நோக்கினாலும் படங்களையே காண்கிறோம்; தெருச் சுவர்களிலும், செய்தித்தாள்களிலும், கைச்சீட்டுகளிலும் காணும் ஒவ்வொரு படமும் ஒரு கருத்தையோ பல கருத்துக்களையோ விளம்பரப்படுத்துகிறது. படத்தின் செய்தியைச் சொற்களாக மாற்றுவது இக்காலத்திற்கேற்ற ஒரு மொழிப்பயிற்சி யன்றோ?

கொடுக்கப்பட்ட பொருளைக் கண்ணோட்டமாகப் படித்து, அதைக் குறிப்பிட்ட அளவில் முற்றிலுமோ அல்லது தேவையான முறையிலோ சுருக்கி எழுதுதலும், குறிப்புகளை விரித்து எழுதுதலும், தேவைக்கேற்றபடி உருவை மாற்றிக் கூறுதலும் மொழிப்பயிற்சிகளேயாகும். இப்பயிற்சிகள் தமிழிலன்றிப் பிற பாடங்களிலும் அளவற்ற உதவி அளிக்கத்தக்கன.

இம்மாதிரியான பலவகை மொழிப்பயிற்சிகள் இல்லாமல் மாணாக்கர்கள் எழுதும் கடிதங்களிலும் கட்டுரைகளிலும் தம்முடைய உள்ளக் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் எப்படி வெளியிடக்கூடும்? இந்நிலைமையில் அத்தகைய கட்டுரைகளை எழுதச் சொல்ல உரிமைதான் நமக்கேது? ஆகையால், அவரவர் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் தாய்மொழியில் வெளியிட ஊக்கமளிக்க முடியாத நிலைமையில் கற்பைப்பற்றியும் நட்பைப்பற்றியும் எழுதச் சொல்லி அமைதிபெற முயலுகிறோம்.

# 9. கடிதங்களும் கட்டுரைகளும்

இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் நாளைக்குப் பெரியவர்களாகி வாழ்க்கை நடத்தும்போது அவர்கள் தமிழில் எழுதும் பொருள்கள் எவை? 'கற்பு', 'நட்பு' என்ற கட்டுரைகளா, அண்ணன் தம்பிகளுக்கும், அதிகாரிகளுக்கும், தொழில் முறையில் வியாபாரிகளுக்கும் எழுதும் கடிதங்களா?

இது நிற்க, வாழ்க்கையில் அடிக்கடி நாம் காணும் மற்றொரு நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொள்ளுவோம். "இதற்காக நீங்கள் நேரில் வர வேண்டுமா? ஒரு கடிதம் போட்டால் உங்களுக்கு வேண்டியவற்றை நீங்கள் நேரிலிருந்து சொன்னதைப்போல நினைத்து முடித்திருக்கமாட்டேனா?" என்று எத்தனைபேர் அடிக்கடி சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

இனி முதலில் சொன்னதையும் பிறகு சொன்னதையும் சேர்த்து ஆராய்வோம். நேரிலிருந்து பேசுவதைப்போன்ற அழுத்தமுள்ள கடிதங்கள் எழுதத் தெரியாமலும், கடிதம் எழுதினால் என்ன நினைத்துக்கொள்ளுவார்களோ என்று பயந்து தேவையற்ற வழிப்போக்கைப் பெருக்கிக்கொண்டும் நம் வாழ்நாள்களில் சிலவற்றை வீணாக்க நேருவதற்கும் நமது தமிழ்ப் படிப்பின் குறைவுகளுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லையா?

முற்காலத்தில் இல்லாமல் இப்போதுள்ள போக்குவரவு சாதனங்களில் புகைவண்டி போன்ற விரைவான வழிப்போக்கு வசதி ஒன்று; மலிவான தபாற்செலவு மற்றொன்று. கல்விக்கழகு இவ்விரு சாதனங்களில் எளியதைக் கைக்கொண்டு வலிய தன் பயனைப் பெறுதல். இந்நோக்கத்திற் கிணங்க நமது தமிழ்க் கல்விமுறை அமைந்திருக்கிறதா? நேரில் சொல்லக்கூடியதைப் பெரும்பாலும் கடிதத்தில் அறிவிக்க இயலாதா? பதினைந்துமுழ முண்டாசு கட்டிக்கொண்டு தடிக்கொம்பைக் கையிலெடுத்துத் தாசில்தார் ஆபீஸுக்குப் போய்த் தம் விண்ணப்பத்தைத் தெரிவிக்கும் வலிவு தமிழ் மொழியில் அடங்கியிருக்கவில்லையா? இவ்வலிவில் கடுகளவாவது தமிழாசிரியர்கள் ஆண்டாண்டுதோறும் கற்பித்துத் தம் மாணாக்கர்களுக்கு அளித்திருக்கின்றனரா?

இல்லை என்றால் இனிமேலாவது இத்தேவையை உணர்ந்து நடக்கவேண்டும். இதற்கு வழி நம்முடைய பள்ளிக்கூடங்களில் நடைபெற்றுவரும் கட்டுரை எழுதும் பயிற்சி முற்றிலும் திருந்துதலே.

ஸர் பிலிப் ஹார்ட்டாக் என்ற ஆங்கிலக் கல்வி முறைப் புலவர், கட்டுரைகள் எல்லாவற்றையுமே இருவகைகளுக்குள் தொகுக்கக்கூடும் என்று சொல்லுகிறார். ஒரு வகையை 'ரிக்கார்டு' அல்லது நினைவுப்பதிவு என்று கூறலாம்; மற்றொன்றை 'மெஸ்ஸேஜ்' அல்லது செய்தி அல்லது அறிக்கை எனக் கூறலாம். இங்கிலீஷிலும்கூட பள்ளிக்கூடக் கட்டுரைப் பயிற்சி செவ்வையாயில்லை என்கிறார்

ஸர் பிலிப் அதன் நோக்கமற்ற தன்மையை இப்படிக் குறிப்பிடுகிறார்: "ஏதாவது ஒரு பொருளைப்பற்றி யாருக்காவது எதையாவது எழுதுதலைக் கட்டுரை என்கிறோம்." பாலார்ட் என்ற மற்றொரு கல்விமுறைப் புலவர், "இவ்வகைக் கட்டுரைப் பயிற்சி ஒற்றைச் சக்கரத்தோடு வண்டி ஓட்டுவது போல்இருக்கிறது"என்கிறார். அவருடைய கருத்தும் ஸர் பிலிப் ஹார்ட்டாகுடைய கருத்தும் என்னவென்றால், ஒவ்வொரு கட்டுரையும் அதை எழுதுகிறவர் பிறருக்கோ அல்லது தன் பிற்கால நினைவுக்குதவியாகவோ பொருளைத் தெளிவாக உணர்த்தும் நோக்கத்துடன் எழுதப்படவேண்டும் என்பதே.

கடிதங்களைக் கட்டுரைகளின் பெரும்பான்மையான ஒரு பகுதியாகக் கருதி, பொதுவாக எல்லாக் கட்டுரைகளும் எத்தன்மையனவாக எழுதப்பட வேண்டும் என ஆராய்வோம்.

கட்டுரைகளின் பொருள் மாணுக்கர்களின் வாழ்க்கையை நெருங்கித் தொடர்புற்றதாக இருக்க வேண்டும். அதாவது, மாணுக்கர்கள் தமக்குள் இயற்கையாக எழும் உள்ளக் கருத்துகளை, ஒருவருக்கொருவர் வெளியிடத்தக்க பொருள்களைப்பற்றியனவாக இருத்தல் இன்றியமையாதது. இதைப் பொதுக்கொள்கையாக ஏற்றுக்கொண்டாலும், இப்பொருள்களிலுங்கூட பள்ளிக்கூடக் கட்டுரைக்கு ஏற்றனவாயில்லாத சில நீக்கத்தகும். ஏனென்றால், மாணுக்கர்கள் தமக்குள் பேசிக் கொள்ளும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் கட்

டுரைப் பயிற்சி அளிக்கப் பள்ளிக்கூடத்தில் காலம் போதாது. ஆகவே, மிகு பயன் இல்லாதவற்றை யும் எல்லாருக்கும் பொதுவாக இல்லாதவற்றையும் நீக்கி, மிகப் பயன்படத்தக்கவற்றிலே பயிற்சி அளிக்கவேண்டும். இக்கொள்கையைப் பொறுத் துப் பலவகையான கடிதங்கள் எழுதும் முறை கட் டுரைப் பயிற்சியின் பெரும் பகுதியாகும். இவ் வுண்மையைப் பல்வேறு காலங்களில் கல்வி முறை களைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட ஆராய்ச் சித்தொகுதியினர் திரும்பத் திரும்ப இடைவிடாமல் கூறியிருக்கின்றனர். உதாரணமாக, 1926-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட ஹாடோ அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

"கடிதங்களா, கட்டுரைகளா?"

"கடிதமெழுதும் கலையில் இக்காலத்துப் பள் ளிக்கூட மாணாக்கர்களைத் திறமைபெறப் பயிற்று வித்தலின் இன்றியமையாத் தன்மையை மிகவும் வற்புறுத்துகிறோம். அக்கடிதங்கள் மாணாக்கர்கள் உணர்ந்தறியும் வாழ்க்கை நிலைமைகளினின்றும் நிகழ்ச்சிகளினின்றும், அவர்களுடைய தன்வயப் பட்டறிவினின்றும் விளைவனவாகவும், குறித்த நோக்கம் கொண்டவையாகவும் இருக்கவேண்டும். ..........மாணாக்கர்கள் தம்முடைய படிப்புக் காலத் தில் விரிவான கட்டுரைகள் எழுதிப் பயிலுவதில் எவ்வளவோ காலஞ் செலுத்திப் பாடுபடுகிறார்க ளெனினும், பிற்காலத்தில் மிகச்சிலரே அவ்வகைக் கட்டுரைகள் எழுத நேரிடுகிறது; ஆனால் எல்லா

ருக்குமே எப்பொழுதும் கடிதம் எழுதும் தேவை ஏற்படுகிறது. பலர் பற்பல கடிதங்கள் எழுதுகிறார் கள். அவர்கள் எழுதும் அக்கடிதங்களைச் செவ்வையாக எழுதப் பயிற்றுவிக்க வேண்டுதல் மிகவும் முக்கியமாகும்.''

---

## 10. கட்டுரைப் பொருள்

சமீபகாலத்தில் பள்ளிக்கூடங்களில் கட்டுரைத் தலைப்புகள் சிறிதளவு வாழ்க்கைத் தொடர்பு பெற் றிருப்பது உண்மையே. ஆயினும், இப்புதுத் தலைப்புகளும் சில வகைகளில் குறைகளுள்ளவை யாகவே தோன்றுகின்றன. எப்படியெனில், 'கற்பு'க்கும் 'நட்பு'க்கும் பதிலாக, 'தீண்டாமை ஒழித்தல்,' 'பெண் கல்வி,' 'நூல் நிலையங்கள்' எனத் தலைப்புகள் மாறினவேயன்றி, இம்மாறுபாடு மாணாக்கர்கள் இசைந்து நினைத்துத் தம் உள்ளக் கருத்துகளை வெளியிடத்தக்க அளவில் இல்லை. இத்தலைப்புகள் மாணாக்கர் தாமாக நினைத்துத் தம் கருத்துகளை வெளியிடச் செய்வதற்கு மாறாக, அங்கு மிங்கும் படித்தவற்றையும் கேட்டவற்றையும் எழு திக்கொட்டுவதற்கே இடந்தருகின்றன. ஸர் பிலிப் ஹார்ட்டாக் சொன்னபடி "ஏதாவது" ஒன்று எழுதும் வகையைச் சேர்ந்தவை. எதற்காக யாரைக் கருதி எழுதப்படுகின்றன என்ற திட்ட மான நோக்கம் இல்லாதவரையில் இவை பயன்

'பெண் கல்வி' என்பதற்குப் பதிலாக, தந்தையிடம் மகன் தனது தங்கையைப் படிப்பிக்கப் பரிந்து பேசும் முறையில் எழுதப்பட்ட கட்டுரையோ கடிதமோ மேற்சொல்லப்பட்ட திட்டமான நோக்கம் கொண்டுள்ளது என்று சொல்லக்கூடும். 'தொழிற்கல்வி' என்ற பொதுத் தலைப்புக்குப் பதிலாக 'நான் விரும்பும் கைத்தொழில்' அல்லது 'என் ஓய்வுகாலத் தொழில்' என்பதைப்பற்றி எழுதப்படும் கட்டுரை ஓரளவில் மாணாக்கரின் உள்ளக் கருத்தை வெளியிடும் முறைகளில் பயிற்சியளிக்கும். கண்ட காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் விவரித்தல், கைத்தொழில், யந்திரத் தொழில் முதலியவற்றின் செயல் அமைப்பு வரலாறுகள் கூறுதல் முதலியன ஏற்ற கட்டுரைத் தலைப்புகளாவன. இவற்றில் பல கடித உருவத்திலும் எழுதுவதற்கேற்றவை. ஆனால் கடிதமெழுதும் பயிற்சிக்கென வேறு பல தலைப்புகளும் உள. அவற்றிலும் பயிற்சி அவசியம்.

கடிதமாயினும் கட்டுரையாயினும் அதனதன் நோக்கம் அழுத்தந் திருத்தமாகப் பதியும்படி எழுதப்படவேண்டும். பொருளின் பல பகுதிகளின் அமைப்பும், மொழிநடையும் எழுதுவோருக்கும் எழுதினதைப் படிப்போருக்கும் ஏற்றபடி இருக்க வேண்டும்.

பொருளமைப்பில் தேவையான தன்மைகள் தெளிவு, கோவை, நிறைவு. இச்சிறு கையேட்டில் இவற்றை விளக்க இடமில்லாமைபற்றி வருந்துகிறோம். எனினும் இவற்றின் உள்ளடங்கிய கருத்

துக்களை ஆசிரியர்கள் அனைவரும் எளிதில் அறியக் கூடும்.

கட்டுரையின் தலைப்புக்கேற்றபடி பொருளைத் திரட்டி அமைக்கும் வழிகள் பலவற்றுள் இரண்டு ஆராயத்தகும். முதல் வழி மாணாக்கர்களுக்கு முன்னமேயே தெரிந்துள்ள பொருள்களை நினைவு படுத்தித் திரட்டுதல். மற்றொரு வழி இதற்கு முன் தெரியாதவற்றைத் தக்க நூல்களிலிருந்தும், பொருள்களையே நோக்கி ஆராய்ந்தும், பிறரைக் கேட்டறிந்தும் திரட்டுதல். கீழ் நிலைகளில் ஒவ்வொரு வழியிலும் தனித்தனியாக இவ்விரு வழிகளில் மாணாக்கர்கள் பயிற்சிபெற வேண்டும். மூன்றும் அல்லது நான்காம் வகுப்பில் புகைவண்டியைப்பற்றிய கட்டுரையோ அல்லது ஓர் அழைப்புக் கடிதமோ எழுதும்போது தேவையான பொருட் பகுதிகள் பெரும்பாலும் நினைவுபடுத்தும் வகையைச் சேர்ந்தவை. கேட்ட கதை அல்லது படித்த கதை ஒன்றை எழுதும்போது பொருட்பகுதிகள் வெளியிலிருந்து திரட்டப்படுபவை. உயர்நிலைக் கட்டுரைகளில் ஒரு பகுதி நினைவுபடுத்திக்கொண்ட பொருளையும் மற்றொரு பகுதி தேடித்திரட்டப்பட்ட பொருளையும் கொண்டதாக இருக்கக்கூடும். இரு வகைகளுக்குமிடையில் குழப்பமின்றி ஆசிரியர் மாணாக்கர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். மாணாக்கர்களுக்குத் தெரிந்தவற்றை ஆசிரியர் சொல்ல முற்பட்டு, அவர்களுடைய ஊக்கத்தையும் நினைவுப் பயிற்சி வசதியையும் கெடுக்கலாகாது; அது போலவே தேடித் திரட்டவேண்டிய பொருளையும்

தாமாகவே சொல்லிக்கொடுத்து அப்பயிற்சிக்குத் தடையுண்டாக்கக்கூடாது. நினைவுபடுத்தும் பொருளாயினும், தேடித்திரட்டும் பொருளாயினும் அது பெரும்பாலும் பட்டறிவினின்றும் கண்ணோட்டப் படிப்பினின்றும் பெறத்தக்கதாகும்.

இருவகைகளிலும் எழுத்துப் பயிற்சிக்கு முன் மாணாக்கருடன் கலந்து பேசிப் பொருள் வகுக்க வேண்டும். இப்பேச்சு கீழ் வகுப்புகளில் விரிவாகவும் விளக்கமாகவும் இருக்கும்; மேல் வகுப்புகளுக்குப் போகப்போக இதன் அளவு குறையும். இறுதியில் கட்டுரை முயற்சி முற்றிலும் மாணாக்கருடையதாக இருக்கவேண்டும்.

பேச்சுமுறையினால் பொருள் திரட்டுதலன்றித் திரட்டிய பொருளை ஏற்ற வரிசையில் அமைக்கப் பயிற்றுதலும் தேவை. தொடர்புள்ள பொருள்களை ஒன்றாகத் தொகுத்தலும், அத்தொகுதிகளில் எவற்றை முன்னே கூறுவது, எவற்றை நடுவில் கூறுவது, எவற்றை முடிவில் கூறுவது என்ற ஒழுங்கைத் திட்டப்படுத்துதலும் உரையாடற் பயிற்சியின் இரண்டாவது நோக்கம். ஆகவே, இவ்வுரையாடலினால் கட்டுரைக்குத் தேவையான தெளிவும், கோவையும், நிறைவும் அமைய இடமுண்டாகின்றது.

## 11. கட்டுரை நடை

கட்டுரை அல்லது கடிதத்தின் நோக்கமும், யார் அக்கட்டுரை அல்லது கடிதத்தை யாருக்கு எழுதுவது என்றும் தெளிவாக உணர்ந்தால்

அதற்கு ஏற்றமொழிநடை எப்படி இருக்கவேண்டும் என்பது தெளிவாகத் தெரியும். ஒரு தமிழ் வாசகப் புத்தகத்தில் ஒரு மாணக்கன் புத்தகக் கடைக் காரருக்கு எழுதும் கடிதத்தில் 'மேல் விலாசம்' என்ற வழக்கிலுள்ள சொல் 'முகவரி' எனவும், 'அனுப்பும்படி' என்ற தொடர் 'அனுப்புமாறு' எனவும் காணப்படுகின்றன. புத்தகக் கடைக்கார ருடன் நேரில் பேசும்போது இச்சொற்களை வழங்க நாம் நினைப்போமா? பேசும் நடைக்கு மாருன எழுதும் நடை உள்ளக் கருத்தையும் உணர்ச்சி யையும் உண்மையாக எப்படி விளக்கக்கூடும்?

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் உயர்ந்த கருத்துக்களைத் தழுவி, புதிய உலகம் ஒன்றைப் படைத்து, அங்குக் கேட்போரைத் தம் முடன் அழைத்துக்கொண்டுபோய் வழிச்செல்லு கையில் அவருடைய நடை அப்பொருளுக்குப் பொருத்தமாயிருக்கிறது; சுத்தானந்த பாரதியார் 'சிலம்புச் செல்வ'த்தில் "யானே அரசன்? யானே கள்வன்!" எனப் பாண்டியனைக் கூறச்செய்வது சிலப்பதிகாரத்தின் காலத்திற்கு ஏற்றது. இவற் றில் சற்றும் முரண்பாடு தோன்றுவதற் கிடமிராது. அதே நடை அண்ணன் தம்பிக்குள்ளோ இரு நண்பருக்கிடையோ உள்ளந்திறந்து ஒருவருக் கொருவர் அவரவர் சில்லறை விவகாரங்களைக் கூறும்போது பொருந்துமோ? அல்லது முதலியா ரவர்களுடைய கருத்துகளை எளிய பேச்சு நடையில் வெளியிட முயன்றல் அவர் உரையின் வலிமை தான் வருமோ? எனவே கட்டுரைகள் கடிதங்

களின் மொழிநடை அவற்றின் பொருளைப் பொருந்தியும், கூறுவோர் கேட்போருடைய உறவைப் பொறுத்தும் இருக்கவேண்டும். பொருள் வேறு நடை வேறாகப் பிரித்து நடையைப்பற்றிக் கொள்கை கூறுதல் இயலாது.

நடையின் இயல்பு காலத்தையும் பொருந்தியிருத்தல் இன்றியமையாதது. உயிருள்ள எம்மொழியும் மற்றெவ்வுயிரைப் போலவே நாளுக்கு நாள் மாறுபாடுடையது. காலத்திற்கேற்ப மொழி மாறுபடுவதைத் தடைசெய்ய ஒருவராலும் இயலாது. வழக்கழிந்த மொழிகளை மாறுபாடில்லாமல் வைத்திருத்தல் எளிது. அம்மொழிகளைப் போற்றுவோர் அவற்றை மாறுபாடில்லாமல் வைத்திருப்பதைக் கண்டு, உயிருடன் வழக்கிலுள்ள மொழிகளையும் அப்படியே வைத்திருக்க முயலுதல், பொம்மையை ஓரிடத்தில் அழகாக வைத்திருப்பதைக் கண்டு உயிர் ததும்பும் ஒரு குழந்தையையும் அதைப்போல் இருக்கும்படி கட்டிவைத்தலை ஒத்திருக்கும். தமிழ் மொழியில் பொருளுக்கும் பெயருக்கும் ஏற்ற மாறுபாட்டெல்லைக்குள் அவ்வக் காலத்திற்கேற்ற மொழியே சிறந்த நடையாகும். இக்கால வாழ்க்கைக்கு ஒத்துவராத பண்டைக் கால நடை இந்நாளைய கருத்துகளையும் உணர்ச்சிகளையும் வெளியிடப் பயன்படுதலரிது. அப்படிப் பயன்படும் என்று அளவுக்கு மீறின முயற்சியுடன் எடுத்துக்காட்டுகளைத் தேடிக்கூறி வாதுவெல்லலாமெனினும், அனைவரும் அம்முறையைக் கையாளச் செய்ய இயலாது.

மேற்கூறப்பட்ட உண்மையைத் தமிழாசிரியர் போதுமான அளவில் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. ஷேக்ஸ்பியர் என்ற இங்கிலீஷ் நாடகப் புலவருடைய நூல்களைக் கற்பிக்கும் இங்கிலீஷ் ஆசிரியர் ஒருவர் ஷேக்ஸ்பியரில் காணப்படும் காலத்து நடையில் மாணாக்கர்களைப் பேசவும் எழுதவும் சொன்னால், அம்மொழியைக் கற்பிக்கும் மற்ற ஆசிரியர் சிரிப்பார்கள். தாம் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் பண்டைய ஆங்கிலச் செய்யுள் ஒன்றில் வரும் 'நும்' என்ற தமிழ்ச் சொல்லுக்கேற்ற 'தை' (thy)யையும், 'பகர்ந்தான்' என்ற தமிழ்ச் சொல்லுக்கேற்ற 'க்வோத்' (quoth) தையும் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்லவோ, கட்டுரையில் வழங்கவோ ஓர் ஆங்கில ஆசிரியர் தம் வகுப்புக்குப் பயிற்சி அளித்தால் ஆங்கிலம் படித்தவருக்கு எப்படித் தோன்றும்? ஆனால் தமிழிலோ செந்தமிழ் எனக் கருதிப் பண்டைத் தமிழை வழங்குவோரை வழிக்கு மாறானவராக எண்ணுவோர் மிகச் சிலரேயாவர். தூய தமிழுக்கென வழிமாறி இயற்கை நடையைக் கைவிடுவோர் சிலர். 'இங்கு' என்பதற்கு 'இவண்' எனவும் 'ஈண்டு' எனவும் எழுதி, வழக்கமற்ற பழஞ் சொற்கள் மாத்திரமே தூய தமிழ் எனக் கருதுவோரும் உளர். ஆகவே நடையின் பொருத்தம் பொருளையும் பெயரையும் தழுவியிருப்பதன்றி, காலத்தையும் தழுவியிருக்க வேண்டும்.

இக்காலத்தின் அறிவுத்துறை மிக மிக அகன்றது. அவ்வகன்ற துறைக்கேற்ற சொற்செல்வ

மும் நடைப்பொருத்தமும் இந்நாளைய தமிழுக்கு இன்றியமையாதவை. எஃகுச் சட்டம் வளைந்தும் கொடுக்கும்; வலிவுடனும் நிற்கும். துருப்பிடித்த இரும்பு உறுதியாக ஒட்டிக்கொண்டிருந்தாலும் அடிபட்டால் எளிதில் உடையும். துருப்பிடித்த இரும்பையொத்த தமிழைக் கண்டு எஃகுச் சட்டத் தமிழென மயங்கலாகாது. எஃகு உலையில் காய்ந்து காய்ந்து உறுதிபெறுவதைப் போலவே, மொழியும் வழங்க வழங்க உறுதிபெறும். எஃகு யுகத்தின் தமிழ் எஃகைப்போல எண்ணற்றபணிகளுக்குதவத் தக்கதாயிருக்கவேண்டும். இன்றைய தமிழாசிரியரும் நாளைய தமிழாசிரியரும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் தமிழ், பாடத் தமிழாக மாத்திரம் இருத்தல் போதாது; பிறபாடக் கருத்துக்களை அறிவிக்கத் தக்கதாயிருக்கவேண்டும். அதுமட்டு மன்று; பல்வேறு கைத்தொழில், பொறித் தொழில், கலைவகைகளைச் சேர்ந்த பொருள்களை உணர்த்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும். புதுப்புதுப் பெயர்கள் வினைகள் ஏற்றுக்கொள்ளும் தன்மையுள்ள நடைகளில் மாணாக்கர்களை ஆசிரியர் பயிற்றுவித்தல் அவசியம்.

## 12. பிறமொழிச் சொற்கள்.

பிறமொழிச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற தமிழ்ச்சொல் உண்டென்று வாதிக்கக் கூடுமாயினும், வழக்கற்ற அச்சொற்களைத் தேடியலைவதைக் காட்டிலும் ஓரளவில் வழக்கத்திற்கு வந்துவிட்ட சொற்களை ஏற்றுக்கொள்ளுதல் நலம்.

'பைசைகிள்' என்ற சொல் இப்போது வழக்கில் வந்துவிட்டது. அப்படி வந்தபிறகு 'துவிசக்கர வண்டி' என்று சொல்லுதலும் எழுதுதலும் பொருந்துமா? அப்படித் தமிழ்ச்சொல்லே தேவையென்றால் இங்கிலீஷ் தெரியாதவர்கள் வழங்கும் சொல்லை ஆராயவேண்டும். இப்படி ஆராய்ந்தால் சில ஊர்களில் இவ்வண்டியை 'மிதிவண்டி' என்று சொல்லுவதை அறியலாம்.

'மிதிவண்டி' என்ற இச்சொல் புதுச்சொல்லாராய்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு சொல் எனக் கருதலாம். ஏனென்றால் இங்கிலீஷ் அறியாத தமிழ் மக்கள் புதுச்சொல் அமைக்கும் முறையும் அறிஞர்கள் அமைக்கும் முறையும் வேறுபடுவதை இச்சொற்றொடர் விளக்குகிறது. அறிஞருக்குத் தோன்றும் வழி மொழிபெயர்ப்பு முறை. மக்களுக்குத் தோன்றும் வழி அச்சொல் உணர்த்தும் பொருளைத் தழுவிய முறை. ஆகவே அறிஞர் 'பை-சைக்கிள்' என்ற இங்கிலீஷ் சொல்லை 'இரு சக்கர வண்டி' அல்லது 'துவி சக்கர வண்டி' என்றார். மக்களோ அதன் சிறப்புத் தன்மையைக் கருதி 'மிதி வண்டி' என்றனர்.

மக்களுடைய முறை இயற்கைக்குகந்த முறை. பொருளின் பிறமொழிப் பெயரைக் கருதாமல் தம் ஐம்புலன்களில் எப்புலனைப் புதுப்பொருள் கவருகிறதோ அப்புலனுக்குத் தோன்றும் சிறப்புத் தன்மையைக்கொண்டு, மக்கள் புதுச்சொல்லை அமைக்கின்றனர். இந்த முறையில் 'கியாஸ் லைட்' என்பதை 'நிலா விளக்கு' என்பார்கள். சில

பொருள்களை அவை தோன்றும் நாடு அல்லது ஊரைத் தழுவிப் பெயரிடுகின்றனர், உ-ம்: மணிலாக் கொட்டை, பம்பாய்க் கக்கூஸ், சீனிச்சர்க்கரை, பெங்களூர்க் கத்திரிக்காய், சீமைச் சுண்ணும்பு. மற்றும் சில பொருள்களை அவற்றின் பயனைக் கொண்டு பெயரிடுகின்றனர், உ—ம்: வில்முடுக்கி, வெட்டிரும்பு. சில வேளைகளில் பிறமொழிப் பெயரையே திரித்து வழங்குகிறார்கள், உ—ம்: இங்கிலீஷிலிருந்து திரிந்த சிமிட்டி, பட்டாளம், பார்க்குச்சி. இன்று தமிழ்மொழி போலவே வழங்கப்படும் காகிதம், கற்பூரம் என்ற சொற்கள் அரபிய மொழியிலிருந்து வந்தவை. ரயில் வண்டி, கார்டு, ஸ்டேஷன், பஸ் என்று சொல்லி மூன்று தலைமுறைக்குமேல் பழகிய பின், நீராவித் தொடர் வண்டி, வண்டிக் காவலாளர், நீராவித் தொடர் வண்டி நிலையம், உந்து வண்டி என்பவை எப்படி வழக்கில் வரக்கூடும்? இப்படியிருந்தும் சில புதிய பாடப் புத்தகங்கள் இச் சொற்களை வழங்க முயலுவது வருந்தத்தக்கதே. எனவே, பிற மொழியிலிருந்து வரும் சொற்கள் மக்களின் இயற்கைக்கும் தமிழ்மொழியின் ஒலித்தன்மைக்கும் இசைந்திருத்தலே ஏற்றதாகும்.

## 12. குறியீடுகள், அச்செழுத்து வகைகள், அச்சு யந்திரம் முதலியவற்றின் உதவி.

தமிழ்க் கல்விமுறை, உலக முன்னேற்றத்தினல் ஏற்பட்ட சாதனங்களைத் தமிழ்வளர்ச்சிக்குப் பயன் படுத்திக்கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டும்.

இன்றுவரையில் வெளிவந்துள்ள தமிழ் வாசகப் புத்தகங்களில் ஒன்றாவது நான்கு காலக் குறிகள், விளி வினுக் குறிகள், மேற்கோள் குறிகளைத் தவிர மற்ற புதிய குறியீட்டுத் துணைகளைப் பற்றிக் கூறவில்லை. தமிழாசிரியர் பலருடைய கையெழுத்துப் பிரதிகளில் பெரும்பான்மையானவற்றில் இக்குறியீடுகளுங்கூடப் பயன்படுவதைக் காணுதலரிது. எழுத்தாணியால் பனையோலையில் எழுதின எழுத்துமுறைதான் காகிதத்தில் பேனவினல் எழுதக் கூடிய இன்றும் காணப்படுகிறது. ஓலையில் எழுதின காலத்தில் எழுத்தாணியை அடிக்கடி ஓலையைவிட்டெடுத்தல் இயலாதாகையால், எழுத்துக்கள் தொடர்ந்து எழுதப்பட்டன. சொற்களுக்கிடையில் இடம்விட்டு எழுதுதலும், குறியீடுகளும் அந்த நிலையில் எண்ணத்தக்கனவாயில்லை. இன்றும் ஏன் நாம் அதே முறையில் எழுதவேண்டும் ?

உலக முழுவதும் எல்லா மொழிகளுக்கும் காகிதம், பேனு, அச்செழுத்து வகைகள், பொதுவாகிவிட்ட குறியீடுகள், அச்சுயந்திர உதவி இவை யெல்லாம் பிள்ளைகள் தமிழை எளிதில் கற்றுத் திறமையுடன் பயன்படுத்துவதற்கும், தமிழ் மொழியின் கருத்துணர்த்தும் தன்மையைப் பெருக்கவும் ஏற்பட்டிருக்கையில், இவற்றை ஆசிரியர் கையாளாமலும் மாணுக்கர்கள் கையாளக் கற்பிக்காமலும் இருத்தல் தகுதியா ? மேல் நாடுகளில் அறிவைப் பரப்பவும், புத்தகங்களின் பயனையும் படிப்பின் இன்பத்தையும் பெருக்கவும் இக்கருவிகள் எவ்வளவு உதவுகின்றன என்பதை எண்ணிப்

பார்க்கலாகாதா? இவற்றை நாமும் ஏன் அவ்வகையில் கையாண்டு தமிழுக்குத் தொண்டுபுரியலாகாது? இக்கருவிகளைப் பயன்படுத்தி வெளியிடப்படும் புத்தகங்கள் எவ்வளவு உணர்ச்சி யெழுப்பத்தக்கனவாயிருக்கின்றன? உயிரற்றதாகத் தோன்றும் ஏட்டெழுத்துக்கு உயிரளிப்பதைக் கண்கூடாகக் காணவில்லையா?

இந்நோக்கத்திற்கிணங்க, பள்ளிக்கூடக் கல்வி முறையில் ஆசிரியர் செய்யத்தக்கவை எவையெனப் பார்ப்போம். முதலாவது, கையெழுத்து. இதில் இப்போது காணப்படும் குறைகள் இரண்டு. வரிவடிவம் போதுமானவரை கவனம் பெருதது ஒன்று; வரிவடிவம் நன்ருயிருக்கும் கையெழுத்துங் கூடப் படிப்பதற்கு எளியதாக வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டும், உணர்ச்சியை விளக்கத் தக்க குறியீடுகள் இடப்பட்டும் இல்லாமை மற்றொரு குறை.

வரிவடிவம் ஒழுங்கும் அழகும் பெறுவதற்குக் 'காப்பி' எழுதுவது மாத்திரம் போதாது. தொடக்க நிலையில் வரிவடிவம் அமைவதற்கு மட்டுமே இப் பயிற்சி பயன்படும். அதன் பிறகு மாணக்கர் எழுதும் ஒவ்வொரு பாடமும் எழுத்துப் பயிற்சிப் பாடமாகவும் கருதப்படவேண்டும். தபால் கார்டு அளவுள்ள அட்டை ஒன்றில் நல்ல கையெழுத்துப் பிரதி ஒன்றைத் தயாரித்து, வேறு எதை எழுதும் போதும் அதைக் கண்ணெதிரில் வைத்துக்கொண்டு எழுதும் பழக்கம் மிகப் பயன் தரும் என்

பது பட்டறிவில் கண்ட முடிவு. இது 'காப்பி' அன்று; அட்டையில் எழுதப்பட்டுள்ள பொருளும் மாணாக்கர் எழுதும் பொருளும் வேறு. எனினும் அட்டையில் எழுதப்பட்டுள்ள பிரதியின் தன்மை தானறியாத புலனுணர்ச்சியின் உதவியினால் மாணாக்கன் எழுதும் பிரதியில் அமையும். சில காலத்திற்குப்பின் அட்டையின் உதவி தேவையிராது.

அழகு, தெளிவு, விரைவு ஆகிய இம்மூன்றும் நல்ல கையெழுத்தின் தன்மைகளாகும். ஆகவே, வரிவடிவம் நன்றாக அமைவதுடன் கையெழுத்தின் விரைவும் பயிற்சிபெறவேண்டும். 'காப்பி' எழுதுவதனால் அழகு மாத்திரமே அமையும். 'காப்பி' எழுதுவதே இல்லாவிட்டால் விரைவு மாத்திரம் கிட்டுமெனினும், தெளிவும் அழகும் கிட்டா. ஆனால் கண்ணெதிரே வைக்கப்படும் அட்டைப் பிரதி தெளிவு, விரைவு, அழகு இம்மூன்று நோக்கங்களும் நிறைவேற உதவும். இம்மூன்றில் முதல் இடம் தெளிவுக்குரியது; இரண்டாவது, விரைவு; மூன்றாவதுதான் அழகு.

சொற்களுக்கிடையிலும் வரிகளுக்கிடையிலும் இடம்விட்டு எழுதுதல் தெளிவின் ஒரு தன்மை. எழுத்தாணியினால் எழுதின காலத்தில் ஓலையை விட்டு ஆணியை அடிக்கடி எடுக்கமுடியாத காரணத்தினாலும் ஓலையின் குறுகலாலும் அமைந்த எழுத்துருவம் காகிதத்தில் எழுதும் இந்நாளிலும் கைப்பற்றப்படத் தேவையில்லை. காகிதத்தில்

சொற்களுக்கும் வரிகளுக்கும் இடையே இடம்விட்டு எழுதுதல் எளிது; அவசியமும் ஆகும். இதனால் உண்டாகும் தெளிவை விரித்துக் கூறவேண்டியதில்லை. ஆனால் சொற்களுக்கிடையில் இடம்விட்டு எழுதுதலின் மற்றொரு பயன் ஆழ்ந்துணரத்தக்கதாகும்.

மாணாக்கர்களுடைய எழுத்துப் பிழைகளில் ஒரு பெரும் பகுதி சந்திப்பிழைகள் என்பதில் ஐயமில்லை. சந்தி விதிகளை அறிந்தவர்களுங்கூட விரைவாக எழுதும்போது பிழை செய்வதுண்டு. இதற்கு ஒரு காரணம் சந்தியின் இடம் கண்ணுக்கு எளிதில் புலப்படாமல் இருத்தல் என்று கூறலாம். சொற்களுக்கிடையில் இடம்விட்டு எழுதுவதால் சந்தி நேரும் இடங்கள் தெளிவுறுகின்றன. சந்திப் பிழைகள் மறதியால் ஏற்பட்டிருக்குமானால், அவை இத் தெளிவினால் உடனே கண்ணுக்குப் புலப்பட்டுவிடுகின்றன. ஆகையால் அவற்றை உடனுக்குடன் திருத்திவிடக்கூடும். எனவே, சொற்களுக்கிடையில் இடம்விட்டெழுதுதல் திருத்தமாக எழுதுவதற்குப் பெரும் பயனை அளிக்கத்தக்கதென விளங்கவில்லையா ?

எழுத்துப் பிரதிகளை உணர்ச்சியுடன் படிக்கவும் சொற்களிடையே இடம்விட்டெழுதுதல் பயன்படும். கூட்டியியக்கத்தக்க சொற்களைக் கூட்டியும் தனித்தியக்கவேண்டியவற்றைத் தனித்தும் படிக்க இம்முறை எவ்வளவு பயன்படக்கூடும் என்பது அச்சுப் பிரதிகளையும் எழுத்துப் பிரதிகளையும் வாசிக்

கும் வேறுபாட்டைக் காணுமிடத்தில் விளங்கும். இம்முறையையும் சந்தி விதிகளையும் கலந்து கையாளுவதால் ஒரே சொல் தொகுதியுள்ள வாக்கியங்களை நோக்கத்திற்கிணங்க எவ்வெவ் வகைகளில் மாற்றிப் படிக்கக்கூடும் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

மாணுக்கர்களின் கையெழுத்தைப் போதுமான அளவில் ஆசிரியர் கவனிக்காமையால் உண்டாகும் ஒரு தீமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எழுதியதைத் திருப்பிப் படித்துப் பிழைகளைத் திருத்தும்படி ஆசிரியர்கள் எவ்வளவு வற்புறுத்தினும் மாணுக்கர்கள் ஏன் பெரும்பாலும் அப்படிச் செய்வதில்லை? இக்காரணம் மாணுக்கர்களுடைய எழுத்துப் பிரதி அவர்களே மறுபடியும் வாசிக்க விருப்பமில்லாத நிலைமையில் இருப்பதே. எழுத்துப்பிரதி படிப்பதற்கு இன்பம் தரக்கூடியதாக இருந்தாலன்றோ அதைத் திருப்பிப் படிப்பார்கள்? எழுதுவதைத் திருப்பிப் படிக்காவிடின், பிழைகள் திருந்தி மொழி முன்னேற்றம் எப்படி வரும்? ஆகவே, கையெழுத்துக்குப் போதுமான கவனமும் ஊக்கமும் அளித்தால் இன்று நாம் மாணுக்கருடைய எழுத்துப் பிரதிகளில் காணும் சந்திப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் பெரும்பாலும் நீங்கக்கூடும் என ஐயமறக் கூறலாம். இதில் ஆசிரியருடைய கையெழுத்து மாணுக்கர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும்.

குறியீடுகளைக் கையாளுதல் இடம்விட்டெழுதலால் கிடைக்கும் பயனை அதே வகையில் இன்னும்

பல மடங்கு பெருக்கத்தகும். மாணக்கர் எழுதும் கடிதக்கட்டுரைகளிலும் மற்றெல்லாப் பயிற்சிகளிலும் தொடக்க முதல் குறியீடுகளைத் தக்க வழியில் வழங்கப் பயிற்றுவிக்கப்படவேண்டும். இதைப் பற்றி விரிவாகக் கூற இங்கு இடமில்லை என்றாலும், ஒரே ஒரு எச்சரிக்கை மாத்திரம் குறிப்பிடப்படத் தகும். அதாவது குறியீடுகளை வழங்கவேண்டும் என்ற கொள்கையில் அளவு மீறி அவற்றை உபயோகிக்கலாகாது என்பதே. சில அச்சுப்புத்தகங்களிலுங்கூடக் காணப்படும் இவ்வுதாரணங்களை நோக்குவோம்:

"அவருடைய ஆச்சிரமமே, அச்சிறுவர்கட்கு
வீடும் கலாசாலையுமாகும்.

*** ***

திண்ணனர் நாளொருமேனியும், பொழுதொரு
வண்ணமுமாக வளர்ந்து...

*** ***

ஒருநாள், வேட்டையாடிக்கொண்டிருக்கும்பொழுது...

*** ***

மொஹெஞ்சொதரோ, ஹரப்பா முதலிய இடங்களில் காணப்படும் நாகரிகத்தைக்கொண்டு மிகப் பழைய காலத்து இந்திய மக்கள் உயர்ந்த நாகரிகத்தினர்; அயல் நாட்டு வியாபாரிகள் இங்கு வந்திருந்து வியாபாரம் செய்தனர் என்பன போன்ற செய்திகளை அறியலாம்.

* * *

மந்திரியோ சிறிதும் தளராமல் ஹா! இதென்ன மோசம்!......நான் ஒன்றுமறியேன் என்றார்.

முதல் மூன்று உதாரணங்களில் காற்புள்ளிகள் தேவையா? சொல்லோட்டத்திற்கு அவை தடையாயிருத்தல் விளங்குகிறது. நான்காம் உதாரணத்தில் காணப்படும் அரைப்புள்ளி அதற்கு முன் இருக்கும் வரிகளை முற்றுப்பெற்ற வாக்கியமாக்கவில்லை; பின் பகுதியைத் தனியாக நோக்குமிடத்து 'என்பன' என்ற பன்மைச் சொல்லுக்கு ஆதாரமில்லை. ஆகவே இக்குறி தவறாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐந்தாவது உதாரணத்தில் மேற்கோள் தொடங்கும் குறி விட்டுப்போயிருக்கிறதைக் காணலாம். இத்தகைய குறியீட்டுப் பிழைகளை நீக்கவேண்டும்.

எழுத்தச்சுக்களும் அச்சுயந்திரமும் ஏற்பட்டதால் உண்டான பயன்களில் குறியீடுகள் ஒரு வகையே. எழுத்துக்கள் வெவ்வேறு அளவிலும் பலவித முகப்புகளுடன் ஏற்பட்டுள்ளதைப் பின்பற்றிக் கையெழுத்திலும் பயனைப் பெருக்கத் தக்க சில முறைகளைக் கையாளலாம். இவற்றின் உதவியைப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே மாணாக்கர்களுக்கு ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுதல் நன்று. ஒவ்வொரு பத்தியின் முதல் வரியும் பின் தாங்கித் தொடங்கப்படுதலும், சிறப்பான சொற்களையும் தலைப்புகளையும் அடியில் கோடிட்டு விளக்குதலும் இதுவரையில் வழக்கில் வந்துள்ளன. ஒற்றை அடிக்கோட்டோடு நில்லாமல் இரட்டைக் கோடுகளையும், 'வங்கி'க் கோடுகளையும், எழுத்துக்களின் அளவு வேறுபாடுகளையும் உபயோகிக்கத்-

தக்க இடங்களைப்பற்றியும் ஆசிரியர் கற்பித்தல் பிற்காலத்தில் பயனளிக்கும்.

ஆசிரியர்களிடையிலும் மாணாக்கர்களிடையிலும் ஓரளவு பொதுமக்களிடையிலுங்கூடச் சில எழுத்துமுறைத் துணைகள் அச்சுக்கே உரியன எனவும், கையெழுத்துக்குத் தேவையில்லை எனவும் ஒரு கொள்கை இருப்பதாகத் தோன்றுகிறது. இக்கொள்கைக்குக் காரணமே இல்லை. 'பொருளடக்கம்' என்பது அச்சுப் புத்தகங்களுக்கே தேவை, மாணாக்கர்களுடைய' கட்டுரைக் கைப்பிரதிப் புத்தகத்திற்குத் தேவையில்லை என்ற கொள்கையின்பேரில் இதைப் பள்ளிக்கூடங்களில் கவனிக்காமல் இருத்தல் இக்கொள்கையின் ஓர் உதாரணமாகும். சற்றுமுன் விரிவாகக் கூறப்பட்டபடி சொற்களிடையே இடம்விடாமல் எழுதும் வழக்கமும் இவ்வுதாரணங்களுள் ஒன்றாகக் கூறத்தக்கதே. எழுதும் தாள்களின் தலைப்பில் பக்கவரிசை இலக்கமிடாதிருத்தல் மற்றொரு உதாரணம். இவ்விதமான உதாரணங்களை வளர்க்கத் தேவையில்லை. 'செய்வன திருந்தச் செய்' என்ற ஔவையார் சொல்லைப் பள்ளிக்கூடங்களில் தமிழ் எழுத்துக்குக் குறிக்கோளாகக் கொண்டாலே போதும்; தமிழ் முன்னேற்றமடைய இதைவிடச் சுருக்கமாக வழிகூற இயலாது.

## 13. வாசகப் புத்தகங்கள்

வாசகப் புத்தகங்களில் காணத்தக்க இயல்புகள் மொழிப் பயிற்றுமுறை நூல்கள் எல்லாவற்றி

லும் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வியல்புகள் தமிழுக்குத் தனிப்பட்டவை அல்ல. சுருங்கக் கூறினல் இப்புத்தக வரிசைகள் பொருள், மொழி நடை, பயிற்சிகள் உள்பட பொது அமைப்பு, அச்சுமுறை ஆகியவை பிள்ளைகளின் அவ்வப் பருவங்களுக்கு ஏற்ற தனிப்புத்தகங்கள் அமைந்த வரிசைளாகவும், பருவத்திற்குப் பருவம் படிப்படியாக உயர்வும், வளர்ச்சியும், முன்னேற்றமும் கொண்டவையாகவும் இருக்கவேண்டும். இக்கருத்துக்களை சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான் திரு. ச. ஆறுமுக முதலியார் தமிழ் கற்பிக்கும் முறை என்னும் தம்முடைய நூலில் விரிவாக முறைப்படுத்திக் கூறியிருக்கிறார். ஆகவே அவற்றை இங்குத் திருப்பிக் கூருமல் பட்டறிவில் தோன்றத்தக்க இரண்டொரு கருத்துக்களை மட்டிலும் குறிப்பிடுவோம்.

இப்போதுள்ள நிலைமையில் தமிழ் வாசகப் புத்தகங்கள் மேற்கண்ட இயல்புகளுக்கிணங்க ஒரே ஆசிரியர் தனியாக எழுதக்கூடியன அல்ல. அவற்றிற்கு வெவ்வேறு துறைகளில் புலமை வாய்ந்த இருவர் மூவருடைய கூட்டுமுயற்சி தேவை. எல்லாத் துறைகளிலும் புலமைபெற்ற ஒருவரே கிடைத்தல் அரிது. ஆகவே பொருள் துறையில் புலமை ஒருவருடையதாகவும், மொழித்துறையில் புலமை மற்ருெருவருடையதாகவும், மாணுக்கருடைய உள்ளத்தன்மையையும் பயிற்று முறைகளையும் பின்பற்றி நூலை உருவாக்கும் திறமை வேருெருவ்ருடையதாகவும் இருத்தலே இந்நாளில்

இயலும். இம்மூவருக்குள் ஒருவிதமான நோக்க ஒற்றுமையும் தேவை. மூவருடைய தமிழ்ப்பற்றும், முன்னேற்ற அவாவும், சுவைத்தன்மையும் சற்றேறக்குறையவாவது ஒருவகைப்பட்டதாக இருக்க வேண்டும். புத்தகங்களின் பதிப்பாசிரியரும் அவற்றை வெளியிடுவோரும் இவ்வுண்மைகளை அறிந்திருக்கத் தகும்.

மேற்கூறப்பட்ட மூவரன்றி நூல்களை அச்சிடும் கலையில் தேர்ச்சி பெற்ற ஒருவருடைய ஒத்துழைப்பும் தேவையாகும். பெரும்பாலும் நூல்களின் பதிப்பாசிரியர் இத்திறமையுள்ளவராக இருக்கவேண்டும்.

மேற்கூறப்பட்ட நான்குவகைப் புலமைகளடங்கிய புத்தகங்களே இக்காலத்திற்கேற்ற விரிவான பலவகைப்பட்ட பொருள்துறைகளைத் தழுவியனவாக இருக்கும்; அவ்வப்பொருளுக்கு ஏற்ற மொழிநடையை எடுத்துக்காட்டும் பாடங்கள் அடங்கியனவாக இருக்கும்; எல்லாத் தேவைகளுக்கும் ஏற்ற மொழிப்பயிற்சிகள் இணைக்கப் பெற்றிருக்கும்; அழகாகவும், மாணாக்கர் விரும்பத் தக்க தோற்றத்துடனும் அச்சிடப்பட்டிருக்கும். பயிற்றுமுறைப் போக்கில் ஆசிரியர் புத்தகத்திற்கு அடிமைப்பட்க் கூடாதென்றும், தமது தனித் தன்மையை வெளிப்படுத்திக் கற்பிக்கவேண்டும் என்றும் எத்தனை முறை சொன்னாலும், எவ்வளவிலோ ஒத்துக்கொண்டாலும், அனுபவத்தில் புத்தகத்தின் ஆட்சி எதிர்க்கத் தக்கதன்று. ‘புத்தகம்

எப்படி இருந்தாலென்ன, சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயரைப் பொருத்ததன்றோ படிப்பு' என்று பேச்சுப் பேசலாம்; ஆனால் இப்போது உள்ள நிலைமையில் அப்பேச்சு செல்லாது.

அன்றியும் ஆசிரியர் துணையின்றி மாணக்கரிடம் அகன்ற படிப்பைப் பெருக்குதல் தமிழ் கற்பித்தலின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஆகவே புத்தக அமைப்பும் அச்சீடும் தமிழ்க் கல்வியில் உயர்ந்த இடமும் அளவற்ற கவனமும் பெறத் தக்க பகுதி என ஆசிரியர்களும் புத்தகங்கள் வெளியிடுவோரும் உணரவேண்டும்.

வாசகப் புத்தகப் பொருளைப் பொறுத்த மூன்று எச்சரிக்கைகள் இங்குக் குறிப்பிடத்தகும்.

முதலாவது, 'பழமொழி'களின் மொழியியல்புக்கும் நீதிபுகட்டலுக்கும் உள்ள நோக்க வேற்றுமையை உணராமையினால் உண்டாகும் குழப்பம்; முன் பக்கங்களில் விளக்கப்பட்ட தமிழ்க்கல்வி நோக்கங்களை நினைவுபடுத்திக்கொண்டால் இக் குழப்பத்திற்கு இடமிராது. பாடங்களின் நோக்கம் மொழிப் பயிற்சி; ஆகையால் நீதி புகட்டலை நோக்கமாகக்கொள்ளலாகாது. எனவே பாடங்கள் நீதியை முதல் நோக்கமாகக்கொண்ட போக்கில் எழுதப் படக்கூடாது. மொழிப் பயிற்சியுடன் மாணக்கர் கற்றறியத்தக்க நீதியும் பாடத்தில் இணைந்திருக்கக் கூடுமாயின் அந்நீதியை வெளிப்படையாகக் கூறாமல் மாணக்கர் தாமாக உணரவிடுதல் நலம். "ஆகையால், பிள்ளைகளே...." என்ற வகையைச்

சேர்ந்த பாட முடிவினால் பயனில்லை. அவ்வகை யான முடிவு படிப்பதன் சுவையைக் கெடுக்கும்.

இரண்டாவது, பொருளில் பிழைகளும் குறைகளும் புகவிடக்கூடாது. உதாரணமாக, விண்ணுலகடைந்த பெரியார் இன்றும் இவ்வுலகில் இருப்பதுபோலச் சில புத்தகங்கள் மறுபதிப்பில் (திருத்தப்படாமல்) கூறுகின்றன. நீர்வீழ்ச்சிகளின் ஆழம், மலைகளின் உயரம், நதிகளின் நீளம், பெரியார் வாழ்ந்த காலம் முதலியவற்றிலும், கைத்தொழில் முதலான தொழில் முறை விரிவுரைகளிலும் பிழைகளுக்கு இடந்தரலாகாது.

மூன்றாவது, பொதுமக்களால் ஒத்துக் கொள்ளப்படாத கொள்கைகளுக்கும், மக்களின் எப்பகுதியினருக்காவது துன்பமளிக்கும் கருத்துகளுக்கும் புத்தகங்களில் இடங்கொடுக்கக்கூடாது. உதாரணமாக, மதுவிலக்கைப்பற்றிய கொள்கைகள் எல்லாரும் ஒப்புக்கொள்ளத் தக்கவை; ஆனால் தேநீர், காப்பி முதலியன குடித்தல் கள்குடிபோன்றது என்று கூறுவதைப் பேச்சில் சிலர் ஒத்துக் கொள்ளலாமாயினும், அது புத்தகத்தில் கூறத் தக்கதன்று. மற்றும் திருநாவுக்கரசர் முதலிய பெரியார்களின் வரலாறுகள் பிற சமயத்தினருக்கு துன்பம் தராத முறையில் எழுதப்படவேண்டும். பிழைத்திருக்கும் பெரியோர்களின் வரலாறுகளை விலக்குதல் நன்று. அப்படிச் சேர்க்கவேண்டுமானால் நாடெங்கும் புகழ்பெற்றவரும் ஒருவரும் எதிர்ப்பு கூறத்தகாதவருமான பெரியாரின் வரலாறுகளை மாத்திரமே சேர்க்கலாம்.

சமீப காலத்தில் எல்லா நற்றன்மைகளும் ஆக்கத்தில்கொண்ட பல நூல்கள் அச்சுக்குறைகளால் பயனற்று மறைவதைக் கண்டிருக்கிறோம். இவ்விதமாக முயற்சி வீணுகாமலிருக்கவும், பொதுவாகவே தமிழ் முன்னேற்றமடையவும் வேண்டுமானல் புத்தக அமைப்புக்குச் சற்றும் குறையாத கவனத்தைப் புத்தக அச்சீடும் பெறவேண்டும். பிள்ளைகளுக்கு மாத்திரமேயன்றிப் பெரியோருக்கும் கவர்ச்சியுள்ளனவாகப் புத்தகங்கள் அச்சிடப்படவேண்டும். இத்துறையில் தமிழ்நாட்டில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பல ஆண்டுகளாகப் புரிந்துவரும் தொண்டு பெரிதும் போற்றத்தக்கதாகும். இவர்களைப் பின்பற்றியோ, அல்லது அவரவருக்கே தோன்றியோ, சென்ற சில ஆண்டுகளாகப் புத்தகங்களை வெளியிடுவோர் அச்சமைப்பில் கவனம் செலுத்திவருதல் குறிப்பிடத்தகும். ஆயினும் இவர்களுள் பலர் புத்தக வெளியட்டையின் அழகில் செலுத்தும் கவனம் உட்பகுதியிலும் செலுத்தாதிருத்தல் வருந்தத்தக்கதே. சுருக்கிக்கூறுமிடத்தே புத்தகங்கள் புற அழகுடன் அக அழகும் பொருந்தியிருக்க வேண்டும்.

புத்தகப்பொருளின் அச்செழுத்தளவும் வரிகளின் இடைவழியும் எளிதில் வாசிப்பதற் கேற்றவையாக இருக்கவேண்டும் என்ற பொதுவான கொள்கை மாத்திரமே இந்நாள் வரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனல் எழுத்துக்களின் நுட்பமான அளவும் வரிகளின் இடை

வழியும் எப்படி இருக்கவேண்டும் என்று தமிழர் ஆராயவில்லை. இனியாவது இது ஆராயத்தகும். இங்கிலீஷில் ஆராய்ந்தறியப்பட்ட முடிவு என்னவென்றால், எழுத்துக்கள் வரிக்கு மேலும் கீழும் வரும் விளைவுகள் நீங்கலாக 1½ மில்லிமீட்டர் (பைக்கா) உயரத்திற்குக் குறையாமலும், கீழ் நோக்கிய கோடுகள் ¼ மில்லிமீட்டர் தடிப்புக்குக் குறையாமலும், வரிகளுக்கிடையில் 2½ மில்லி மீட்டர் இடைவழிக்குக் குறையாமலும் இருக்க வேண்டும் என்பதே. இவ்வளவுகள் ஜர்மனி நாட்டிலுள்ள ப்ரஸ்லா நகரத்தில் ஆராய்ச்சி புரிந்த டாக்டர் ஹெர்மன் கோன் என்பவருடைய முடிவுகளாகும். வரிகளின் நீளத்தைப்பற்றியும் அவை 10 மில்லிமீட்டர் அல்லது 4 அங்குலங்களுக்கு அதிகமாயிருக்கக்கூடாதென்று டாக்டர் கோன் முடிவுகூறி இருக்கிறார். முதல் வகுப்பில் 2·6 மில்லி மீட்டர் (16 பாய்ன்ட்) உயரத்திற்குக் குறைந்த எழுத்துக்களும் 4½ மில்லிமீட்டருக்குக் குறைந்த வரியிடையும் கூடாது என அவர் கூறுகிறார். இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளுக்கு 2 மில்லி மீட்டருக்குக் குறையாத (14 பாய்ன்ட்) உயரமும், 4 மில்லிமீட்டருக்குக் குறையாத வரியிடையும் தேவை என்கிறார். நான்காம் வகுப்பில் 1 8 மில்லி மீட்டர் (12 பாய்ன்ட்) உயரமும் 3 6 மில்லிமீட்டர் வரியிடையும் அனுமதிக்கிறார்.

புத்தகத்தாள்களின் நிறத்தைப்பற்றி கிரிப்பிங், பிரான்ஸ் என்ற இரு ஆராய்ச்சியாளர் பழுப்பு நிறக காகிதம் கூடாது என வற்புறுத்தியிருக்கின்றனர்.

வெளிச்சத்தில் கண்ணைக் கூசச்செய்யும் பளபளப்பும் கூடாது என்று கூறியிருக்கிறார்கள்.

புத்தகங்களின் அக அழகில் ஒரு பகுதி அவற்றிலுள்ள படங்களாலானதாகும். இத்துறையில் தமிழ்ப் புத்தகங்கள் அதிக முன்னேற்றம் பெற வேண்டும். கண்ணைக் கவரும் சிற்பவேலைகள் நிறைந்த தமிழ் நாட்டின் புத்தகங்களில் காணப்படும் படங்களில்பெரும்பான்மையானவை வெட்கத்திற்கிடமுள்ளவையாக இருக்கின்றன. பலநிறப் படங்களோ தமிழ்ப் புத்தகங்களில் காணுதற்கரியனவாக இருக்கின்றன. இக்குறையைப் பாராட்டாமல் பிள்ளைகள் தாங்களே புத்தகத்திலுள்ள படங்களுக்கு வர்ணந்தீட்டிக்கொள்வதைப் பார்த்தாவது படிப்பினை பெறமாட்டோமா? மொழிக்கலையைப் பெரிதாகவும் சித்திரக்கலையைச் சிறிதாகவும் கருதின நாள் மலையேறி வருகிறது. இன்றைய உலகில் மொழிப்புலவனைவிடச் சித்திரப்புலவனே பலருடைய கவனத்தைக் கவருகிறான். உலகப் போக்கை அனுசரித்து இருக்கவேண்டிய புத்தகங்களிலும் சித்திரங்கள் உரிய இடமும் தக்க முன்னேற்றமும் பெறவேண்டும்.

## 14. மொழிச்சுவை பரவும் வழிகளும் கருவிகளும்

“கண்ணே, பாப்பா, மிட்டாய் வாங்கித் தருகிறேன்” என்ற பாட்டு ஒரு காலத்தில் எல்லாச் சிறுவர் சிறுமிகளின் வாயிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பிறகு சிறியவர் பெரியவர் எல்லாரும் “சொல்லு, பாப்பா, சுகம் பெற வழி

சொல்லு, பாப்பா" என்று பாடினர். அதற்குச் சில நாட்களுக்குப்பின், தெலுங்கு தெரியாதவர்களுங்கூட '"ராவே, ராவே, பங்காரு பாப்பா" என்று பாடத் தலைப்பட்டனர். "பாப்பா' என்ற சொல்லின் சுவை எப்படிப் பரவிற்று? "ஓடி விளையாடு, பாப்பா" என்று பாரதியார் பாடி அச்சொல்லில் தேனை வைத்தார்.

தமிழ்மொழிக் கல்விக்குப் புலவர் புரியும் தொண்டு மேற்சொன்னபடி 'தேன் வைத்த'லே. இக்கையேட்டின் தொடக்கத்தில் பண்டிதர் - ஆசிரியர் வேறுபாட்டை விளக்கும்போது புலவரை ஒதுக்கிவைத்தோம். ஏனென்றால் புலவருடைய தன்மை அவ்வேறுபாட்டு அட்டவணையில் அடங்கத்தக்கதன்று. மொழிக்குச் சுவை அளிப்பவர் புலவர்; அச்சுவையை நுகர்ந்து எடுத்துக் கூறுவோர் பண்டிதர்; அச்சுவையைப் பயன்படுத்தித் தமிழறிவை அளிப்போர் ஆசிரியர்,

மொழிச்சுவை பரவ உதவும் முதல் வழி இசை. இசைக்குத் துணைபடுபவை இசைக் கருவிகளும் இன்றைய ஒலிபரப்பியும். முன் தலைப்பில் ஆராயப்பட்ட அச்சுப் புத்தகங்கள் வருமுன் மொழியின் உயிர்நிலையாயிருந்து மொழிச்சுவையைப் பரப்பி வந்தது இசை ஒன்றே. அச்சுப் புத்தகங்கள் வந்த பின்னும் அவ்வுயிர் நிலை பெரும்பாலும் இசையிலேயே ஊன்றி இருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் இசையின் நுட்பங்களை அறியுமுன்னும், அறியாதவிடத்தும் அதன் வலிமையாவது உணர்ந்

திருக்கவேண்டும்; இசைக் கருவிகளின் பயனையும் ஒலிபரப்பியின் அளவற்ற பயனெல்லையையும் அறிந்திருக்கத்தகும்.

அச்சுப்புத்தகப் புதுமையின் மயக்கத்தினாலும், பரீக்ஷைப்பட்ட வேட்டையின் வேட்கையினாலும் சில காலம் தமிழ் நாட்டுப் பண்டிதரும் ஆசிரியரும் இசையின் வலிமையை மறந்திருந்தனர்; இன்றும் சிலர் மறந்திருப்பதாகத் தோன்றுகின்றனர். ஆனால் நாட்டு மக்கள் மறக்கவில்லை. 'பெரிய எழுத்து' தேசிங்குராஜன் கதைக்கும், அல்லி அரசாணி மாலைக்கும் விற்பனை குறையவில்லை. நாட்டின் மறுமலர்ச்சிப் பயன்களில் ஒன்றாக இசைக்கலையும் புத்துயிர் பெற்று வருகிறது. நடனக்கலையின் முன்னேற்றத்தினால் மறந்துபோன பழைய 'பதங்க'ளின் சொற்சுவையையும் உணர்ச்சியையும் பலர் அறிந்துவருகின்றனர். புதுமையில் மயக்கந்தந்த அதே அச்சுப்புத்தகங்களின் உதவியைக்கொண்டு அடையாறு கலாக்ஷேத்திரத்தார் போன்றவர்களின் முயற்சியினால் இப்பழைய இசை நூல்கள் இன்று தமிழ் நாட்டில் பரவிவருகின்றன. இசையை உயிர்நிலையாகக் கொண்ட இந்த நாட்டுக் கலைக்களஞ்சியத்தின்* மணத்தை நுகர்ந்து அதனுள் அடங்கியுள்ள சுவையை மாணாக்கர்களுக்களிக்காத தமிழாசிரியர் தமது பொறுப்பை முற்றிலுமுணர்ந்தவராகமாட்டார்.

---

* Folk - lore, folk - songs etc.

இசைக்குப் பொருளாக அமைந்துள்ளது நாட்டுக்கலைக் களஞ்சியம்; இசையின் வலிமையை இன்று பெருக்கி வருவது ஒலிபரப்பிக் கருவி. இவ்விரண்டும் தமிழ்மொழிச்சுவையை மாணாக்கரிடம் படைக்கவும் பரவவும் உதவுகின்ற துணைகள். ஆசிரியர் இத்துணைகளைப்பற்றி அறிந்துணர்ந்தாலும் இல்லாவிட்டாலும் மாணாக்கர் இவற்றைத் தாமே பயன்படுத்திவருகின்றனர். ஆகவே பள்ளிக்கூடத்தில் கற்பிப்பவற்றையும் பிற வழிகளில் மாணாக்கர் பெறுகிறவற்றையும் ஒன்றாகத் தொகுத்து மொழிச்சுவையுடன் மொழிக்கல்வி அளிக்கவேண்டுமானால் இத்துணைகளை ஆசிரியர் புறக்கணிக்க இயலாது.

செய்யுள் பாடத்தைச் சுவையற்ற சுமையாகவும் செய்யலாம்; சுவை நிரம்பிய இன்ப நிகழ்ச்சியாகவும் செய்யலாம். சுவைக்குமுன் இலக்கணம் கூறினால் சுமையாகும்; இசையின் துணையினாலும் நாட்டுக்கலைத் தொடர்பினாலும் சுவையூட்டித் தொடங்கினால் இன்ப நிகழ்ச்சியாகும்.

தமிழ்மொழியில் இன்று காணும் புதுப்படைப்புகள் பள்ளிக்கூடத்திற்குள் எவரும்பெற்ற உணர்ச்சி ஊக்கங்களின் பயனன்று.

> "செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது;
> தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன;
> நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
> நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்"

என்றார் பாரதியார். ஆயினும் பள்ளிக்கூடத்திற்குள் இப்படைப்பூக்கம் அளிக்க இயலாதா?

லும்; தமிழுலகை அறிந்து தமிழில் இன்று கமழும் மணத்தை நுகர்ந்து மாணுக்கருககுத் தமிழ்ச்சுவை யூட்டக் கருதும் தமிழாசிரியருக்கு இயலும்.

## 15. "வால் மாத்திரம் நுழையவில்லை"

மனிதருடைய கண்ணுட்பம் செவிநுட்பத்திற் குச் சற்றும் குறைந்ததன்று. இளம்பருவத்தில் எல்லாப் புலன்களுமே மிக்க நுட்பமுள்ளவையாக இருக்கும். ஆகவே ஆசிரியர் பாடத்தை நினைத்து "எல்லாம் நுழைந்ததா?" என்று கேட்டதற்கு "வால் மாத்திரம் நுழையவில்லை" என்று வளைக் குள் நுழைந்த எலியைக் கவனித்துக்கொண்டிருந்த மாணுக்கன் சொன்ன விடை சிறுவர் இயல்புக்குச் சிறிதும் மாறுபட்டதன்று. இதுவரையிலும் நகைச் சுவை அளித்துவந்த இக்கதை இனி ஆசிரியர் களுக்கு ஒரு படிப்பினையாகவும் இருக்கவேண்டும்.

ஆசிரியர் சொல்லுவதைவிட அவர் செய் வதைத்தான் பிள்ளைகள் பெரும்பாலும் கவனிப் பார்கள். நாள் முழுவதும் பாடம் கற்றுக்கொடுத்து வந்த பண்டைப் பண்டிதர் தெருத்திண்ணையில் தரையிலோ, பாய்மேலோ, மணையிலோ உட்கார்ந்து பாடம் சொல்லிக்கொடுத்தபோது அவர் இடம் விட்டு எழுந்து நடமாட இயலவில்லை; நான்கைந்து மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க அப்படி எழுந்து நடமாடத் தேவையும் இல்லை. மேடை மேல் உட்கார்ந்து புராணம் படித்துச் சொன்ன பண்டிதருக்கும் அவ்வகைத் தேவை கிடையாது. ஆனல் இன்று பள்ளிக்கூட வகுப்பறையில் நாற்

காலியில் உட்கார்ந்து நாற்பத்தைந்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லும் தமிழ் உபாத்தியாயருக்கும் அதேமுறை பொருந்துமா? அன்றியும் நாற்பத்தைந்து பிள்ளைகளுக்கும் ஒரேவிதமான செவியுணவு தகுதியாகுமா? பலருக்குக் கண்ணுணவும் வேண்டும். வகுப்பறையிலும் பள்ளிக்கூடத்திலும் அவ்வுணவுப் பொருள்கள் இருக்கின்றன. வகுப்பறையில் உள்ளன கரும்பலகையும், சீமைச் சுண்ணாம்புக்குச்சியும்; பள்ளிக்கூடத்தில் உள்ளவை படங்களும் மற்ற கல்விபயிற்றுக் கருவிகளும். இவற்றைப் போதுமானவரை தமிழ் ஆசிரியர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உண்டு.

இக்காலத்துத் தமிழ்ப்பாடம் வாய்ச்சொற்பாடம் மாத்திரமன்று; எழுத்துப் பயிற்சியையும் பெரும் பகுதியாகக் கொண்டுள்ளது. எழுத்துப் பயிற்சிக்கு, ஏற்றமுறை எழுதிக் காட்டுதலே. புதுச்சொற்களைப் பிள்ளைகள் பிழையற எழுதி வழங்க வேண்டுமானால் அவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக்காட்டவேண்டும்.

ஒரு சொல்லின் எழுத்தமைப்பில் நமக்கு ஐயம் தோன்றினால் நாம் என்ன செய்கிறோம்? எப்படி அவ்வமைப்பை நினைவுப்படுத்த முயலுகிறோம்? காகிதத்தில் அச்சொல்லை எழுதிப் பார்த்தல்லவா ஐயம் தெளிவுறுகிறோம்? அப்படியிருக்க எழுதிக் காட்டாமல் எழுத்துத்திருத்தம் எப்படி ஏற்படும்? ஆகவே தமிழாசிரியரும் மற்ற ஆசிரியர்களைப்

போலவே கரும்பலகைக்கருகில் நின்று பாடம் கற்பிக்கவேண்டும். நின்று கற்பித்தலால், தேவைக் கேற்றபடி உடனுக்குடன் கரும்பலகையில் மொழிகளை எழுதி விளக்க உதவுவதுமன்றி, பாடஞ் சொல்லுதலுக்கே ஒருவிதமான சுறுசுறுப்பும்உண்டாகும். கரும்பலகையில் எழுதி விளக்குவதற்கு வெள்ளைச் சுண்ணும்புக் குச்சியன்றி பல நிறச் சுண்ணும்புக்குச்சிகளையும் உபயோகித்தால் இக் கரும்பலகையுதவி பலமடங்கு அதிகமான பயனையும் அளிக்கும். முக்கியமாக இலக்கண விளக்கத்தில் பலவகைச் சொற்களைத் தெளிவாகப் பிரித்துக் காட்ட இந்நிறங்கள் பயன்படத்தக்கவை.

மொழிப் பாடங்களில் பொருள் விளக்கப் படங்கள் அதிகமாகத் தேவையில்லை. ஏனெனில் இப் பாடங்களின் முக்கியமான நோக்கம் பொருளறிவு அன்று என்று முன்னமே கூறியிருக்கிறோம். பொருளுக்கும் மொழிகளும் உள்ள தொடர்பையும் பொருத்தத்தையுமே விளக்குதல் இப்பாடங்களின் நோக்கப்பகுதிகளில் ஒன்றாகையாலும், மொழிப்பயிற்சி நோக்கம் முதன்மையானதாகையாலும், பொருளை விளக்குவதற்கெனத் தனிப் படங்கள் வேண்டியதில்லை. ஆனல் மாணுக்கர்கள் கருத்து வெளியிடப் பழகும் மொழிப்பயிற்சிகளுக்கு உதவும் படங்களும், மொழிப்பயிற்சி அட்டவணைகளும் தேவையாகும். படவகைகளில் இவை தொடக்க நிலையில் கதைப் படங்களாயிருக்கும். முடிவுநிலையில் செய்திப் படங்கள், உருவகப் படங்கள் (கார்ட்டூன்ஸ்), நகைச்சுவைப் படங்கள்

முதலியனவாகும். படங்களால் விளக்கப்படும் பொருளையோ செய்தியையோ மொழியில் திருத்தமாகவும், தெளிவாகவும், கோவையாகவும் உணர்த்துதல் இக்கால மொழிக்கல்வியின் ஒரு முக்கியமான பகுதியும் கட்டுரைப் பயிற்சியின் ஒரு சிறந்த வகையும் ஆகும் என்பதை ஆசிரியர் மறக்கலாகாது.

பயிற்றுமுறைக் கல்லூரிகளில் பாடங் கற்பித்தலில் படங்களின் இன்றியமையாத்தன்மை பொதுவாக மாத்திரமே வற்புறுத்தப்பட்டு, இடப் பொருத்தத்தைப் பற்றிப் போதுமான விதிகள் விளக்கப்படாமையால் சில ஆசிரியர்கள் பொருத்தம் தவறிப் படங்களை உபயோகித்தலைக் காணலாம். ஆண்டு முழுவதும் படங்களே பயன்படுத்தாமல் இருந்துவிட்டு, வெளியாள் ஒருவர் வகுப்பைப் பார்வையிட வரும்போது ஆசிரியர் திடீரெனப் படங்களைப் பயன்படுத்த முயலுகையில் இப்பொருத்த மின்மை பெரும்பாலும் வெளிப்படையாகத் தோன்றும். இதனல் படமில்லாமலே விளங்கக்கூடிய பாடங்களுக்குச் சில ஆசிரியர் படங்களைக் கொண்டு வந்து காட்டுவர்; அட்டவணையினல் விளக்கவேண்டியவற்றைப் படத்தினல் விளக்க முயலுவர். சிலர் பரீக்ஷைக்கென மிகப் பாடுபட்டுத் தாமாகவோ சித்திர உபாத்தியாயரைக் கொண்டோ கரும்பலகை நிறையப் படந்தீட்டி வைத்திருப்பர். இக்குறைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே; அது படங்களின் தேவையைத் தாமாக உணராமல் பிறருடைய வற்புறுத்தலுக்கு அஞ்சி

அவற்றை உபயோகிக்க முயலுதல். ஆகவே இவற்றிற்குப் பரிகாரம் படங்களின் பயனைத் தாமே உணர்ந்து எவ்வெப்பாடங்களுக்கு அவை தேவை, எவற்றிற்குத் தேவையில்லை என்று ஆலோசித்துத் தம்முடைய பாடங்களை ஆயத்தப் படுத்துதலே யாகும்.

## 16. பலவகைத் தொல்லைகள் : பெருவகை

பள்ளிக்கூட ஆசிரியர்கள் உள்ளாகும் தொல்லைகள் பல. அவர்களுள் தமிழாசிரியர் உட்படும் தொல்லைகள் இன்னும் பல. இவை என்னென்ன எனப் பார்ப்போம்.

முதல் முதலாக, தமிழ்ப் பாடத்திற்குத் தலைமையாசிரியரும், பிற ஆசிரியர்களும், மாணாக்கர்களும், மற்றெவரும் மதிப்புத் தருவதில்லை. இதற்கு ஒரு காரணம், தாய்மொழி தானாகவே வரும் என்றும், தனிப் பயிற்சி தேவையில்லை என்றும் இன்றும் பரவியுள்ள ஒரு தவறான எண்ணம். மற்றொரு காரணம் இத்தவறான எண்ணம் தமிழாசிரியர்களிடையிலுங்கூடக் காணப்படுதல். இவ்விரண்டு காரணங்களுக்கும் முத்திரையிட்டு முடிவேற்றுக் கொண்டாற்போன்ற மூன்றாம் காரணம், இதுவரையில் தமிழ்மொழி பெற்றிருந்த 'இரண்டாம் மொழி' என்ற பாடப் பதவி. ஆனால் இம் மூன்றாம் காரணம் இன்று ஒழிந்துவிட்டது. மற்ற இரண்டு காரணங்களுங்கூட ஒழிந்ததற்கடையாளமாகப் பயிற்று முறைத் திட்டத்தில் சில ஆண்டுகளாகத் தாய்மொழிப் பயிற்றுமுறை தனியிடம் பெற்றிருக்கிறது.

ஆகவே தலைமையாசிரியர்களும், மற்ற ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும், மாணாக்கர்களும், பெற்றோரும் இன்றைய மாறுபாடுகளை உணர, உணர இத்தொல்லை படிப்படியாக நீங்கும்.

தமிழ்ப்பாடம் மதிப்பிழந்திருத்தல் ஒருபுறமிருக்க, தமிழாசிரியருக்கே மதிப்பில்லாமல் இருத்தல் மற்றொரு தொல்லையாகும். இது பாடத்தின் மதிப்பின்மையால் பெரும்பாலும் விளைந்ததென்றாலும், ஆசிரியரும் இதற்கு ஓரளவில் பொறுப்பாளியாவார். மாணாக்கருடைய உலகம் வேறு, ஆசிரியருடைய உலகம் வேறு என்றும், தமிழாசிரியருடைய உலகமும் மற்ற ஆசிரியருடைய உலகமும் வேறு என்றும் இருக்கும் காலம்வரையில் இம் மதிப்பின்மை நிலைத்தே இருக்கும். இம்மையைத் துறந்தவர்போலும், மறுமையிலேயே எப்போதும் நாட்டம் கொண்டவர்போலும் தோன்றுவார் இம்மையைக் கருதி வாழ்பவருடைய மதிப்பை எப்படிப் பெறுவார்? மறுமைக்கு மாத்திரமன்று தமிழ், இம்மைக்கும் இன்றியமையாதது எனப் புகட்டக் கூடியவர் யார்? வெறும் புகட்டாயில்லாமல் நூலறிவுடன் பட்டறிவையும் இணைத்துப் புலப்படுத்துவார் யார்? வகுப்பாசிரியர்களும் நூலாசிரியர்களுமே அன்றோ? பத்திரிகை ஆசிரியர் மரபில் தோன்றிய நூலாசிரியர்கள் பலர் இன்று தமிழ் நாட்டில் இத்தொண்டைத் தொடங்கிவிட்டனர்; தெள்ளத் தெளிவான முன்னேற்றத்தையும் காட்டி வருகின்றனர். இனிப் பள்ளிக்கூட ஆசிரியரும் அத்தொண்டு புரியவேண்டுமன்றோ?

விடுதலை வீரர் எனக் கூறத்தக்க நூலாசிரியர் இன்று இயற்றியுள்ள தொண்டு என்ன? இதை ஆராய்வோமானால் பள்ளிக்கூட ஆசிரியர் இயற்றத் தக்க தொண்டும் விளங்கும். தமிழில் புதைந்து கிடக்கும் செல்வத்தைத் தோண்டி எடுத்துக் காலத்திற்கேற்ற உருவத்தில் தமிழருக்கு அளித்திருக்கின்னர். தமிழர் மறந்துபோன கம்பராமாயணத்தைத் துரு நீக்கி மெருகிட்டுத் தந்தனர் டி. கே. சி.; ஆழ்வார்களையும் அறுபத்துமூவரில் பலரையும் அழைப்பித்தனர் பி. ஸ்ரீ.; 'கண்ணன் காட்டிய வழி'யைத் தெரிவித்தார் ராஜாஜி; சுப்பிரமணிய பாரதியார் ஆட்சி விடுதலை முரசு மாத்திரம் கொட்டவில்லை; "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்று பாடித் தமிழின் விடுதலை முரசையும் கொட்டினர். பெயரளவில் பட்டம் பெற்றவரைப் போலல்லாமல், மெய்யான அறிஞர் பிறமொழிகளையும் இம்மை வாழ்க்கைக்குரிய நூல்களையும் புறக்கணிக்கவில்லை; அவற்றிலுள்ள செல்வத்தைப் பிழிந்து தமிழருக்குத் தருகின்றனர். இங்கிலீஷில் உள்ளவற்றை மாத்திரமன்றி, பிரெஞ்சு முதலிய மற்ற ஐரோப்பிய மொழிகளினின்றும் சுத்தானந்த பாரதியார் அறிவைத் திரட்டி அளித்து வருகிறார்; வங்க மொழியினின்று சிலர் தமிழுக்குச் செல்வம் தேடிச் சேமித்தனர். 'புத்தியில் ஆதவன்' என்பதைப் போன்ற பத்துப் பதினைந்து சிலேடைகளைத் திருப்பித் திருப்பிக் கூறின சிறு நகைச் சுவையை வாழ்க்கை முழுவதும் பரவிய பெருநகைச் சுவையாக்கி வருகின்றனர் 'சாம்பு' வையும் 'வேம்பு',

வையும் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய 'தேவ'னும் ஆனந்த விகடன், கல்கிப் பத்திரிகைகளின் எழுத்தாளர்கள். முன்பு 'மாலி'யும் இன்று 'தாணு' வும் தமிழரின் நகைச் சுவையை உயர்த்தியிருக்கின் றனர். மிகச் சிக்கலும் நுட்பமுமான இயற்கை நிகழ்ச்சி விதிகளை எளிய தமிழில் தெளிவான முறையில் விளக்கும் வழியைப் பெ. நா. அப்புசாமி காட்டியிருக்கிறார் சிறுகதைத் துறையில் தமிழ ருக்கு வழிகாட்டிவிட்டுக் கு. ப. இராஜகோபாலன் மறைந்தார். 'கத்தி யின்றி ரத்தமின்றி' எனப் பாடின விடுதலையைத் தாமே கண்ணேக்கும் இன் பத்தை நுகர்ந்து நிற்கிறார் நாமக்கல் ராமலிங்கம்; தமிழுக்குத் தாம் இயற்றிய தொண்டைத் தமது வாழ்நாளிலேயே பாராட்டப்பெற்று விளங்குகிறார் வ. ரா. அரசியல் துறையில் தமது காலத்தின் பெரும் பகுதியைக் கழித்துங்கூடத் தாய்மொழிக்குத் தம் கடமையை மறவாது தொண்டு புரிகின்றனர் பாரதி தாஸனும், ஸி. என். அண்ணாத்துரையும். எல்லோருமே பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் கட்டி வருகின்றனர்.

'பண்டிதர்'களுக்கும் இவ் வீரத்தமிழருக்கும் உள்ள வேற்றுமை இதுவே. பின்னவர் பண்டிதர் களைப்போல் பழைமையில் புதைந்து கிடக்காமல் தமிழ்ப்பயிரை உரமிட்டு நீர் பாய்ச்சி வளர்த்து வருகின்றனர். மொழித்துறையையும், பொருள் துறையையும், சுவைத்துறையையும் மிக விரிவாகப் பெருக்கி வருகின்றனர். காலப்போக்கையும, நாட் டின் இயல்பையும், மக்களின் மனப்பான்மையை

யும், ஆங்கிலக் கல்வியினுல் விழிப்பைப் பெற்ற தமிழர் விரும்பித்தேடும் பொருளைத் தமிழில் அளிக்கத் தக்க தேவையையும் உணர்ந்து, பண்டிதருக்கு உரிமை இருந்தும் அவர்கள் பெறமுயலாத மதிப்பைப் பெற்றிருக்கின்றனர். இவர்களுடைய வழியைப் பின்பற்றிஞல் தமிழாசிரியரும் மதிப்புப் பெறக்கூடும். 'எனக்குத் தெரிந்துள்ளதே அறிவு; பிறவெல்லாம் அறிவின்மை' என்ற மனப்பான்மையை அகற்றி, அறிவுத் துறையைப் பெருக்கிக் கொள்ளுதலே ஆசிரியர் மதிப்புப் பெறத்தக்க வழி. மாணுக்கர்களுக்கு விருப்பமும் ஊக்கமும் உள்ள துறைகளில் தாமும் விருப்பமும் ஊக்கமும் கொண்டு அவர்களுடைய மனப்போக்கை அறியவேண்டும். அம்மனப்போக்கை அனுசரித்தே அவர்களுடைய தமிழ்ச் சுவையை உருவாக்கவேண்டும். இதனுல் மாணுக்கருடைய போக்கை ஆசிரியர் பின்பற்ற வேண்டும் என்பது கருத்தன்று. மாணுக்கருடைய உணர்ச்சிகளை அறிந்து அவர்களைப் பயிற்றுவித்தலே நோக்கம். மாணுக்கர் தவருன வழிகளில் போனுலும் இம்முறையினுல் அவர்களைத் திருப்புதல் எளிது.

'நான் சினிமா பார்ப்பதில்லை; சினிமா பார்ப்பது பாவம்' என்று சொல்லும் ஆசிரியருக்கு மதிப்பு அதிகமா, 'பார்த்தால் வாஹினியார் படம் பார்க்க வேண்டும்; இந்த மோசடியான ஆபாசப் படங்களைப் பார்த்துக் காசையும் பொழுதையும் வீணுக்குவதில் என்ன பயன்?' என்று சொல்லும் ஆசிரியருக்கு மதிப்பு அதிகமா? 'கிரிக்கெட் விளையாடிப்

பொழுது போக்கினால் படிப்பு எங்கே வரப்போகிறது' என்ற சொல்லுக்கு மதிப்பு அதிகமா, 'வாழ்க்கைக்குப் படிப்பும் வேண்டும்; கிரிக்கெட்டும் வேண்டும்; அதது அதனதன் அளவுக்கு வேண்டும்; ஒன்றைக் கருதி மற்றொன்றைக் கைவிடலாகாது' என்ற சொல்லுக்கு மதிப்பு அதிகமா? 'அதென்னமோ ஸ்கௌட்டாம்; பிள்ளைகள் ஊர் சுற்றித் திரிகிறார்கள்' என்ற முறையீடு பொருத்தமா, ஸ்கௌட் கொள்கைப்படி ஆசிரியர் மாணாக்கர்களுக்கு அண்ணன் முறையில் வழிகாட்டி 'ஸ்கௌட் பயிற்சிக்குரிய காலத்தில் ஸ்கௌட் பயிற்சி; மற்ற வேலைகளுக்குரிய காலத்தில் மற்ற வேலைகளும் குறைவறச் செய்யப்படவேண்டும்' என்று மாணாக்கர் உணரச்செய்தல் பொருத்தமா? மாணாக்கருடன் அண்ணனைப்போலக் கூடியாடி வழிகாட்டுவதற்குள்ள பயன் வேறெம்முறைக்கு வரும்? சுருங்கக் கூறின், ஆசிரியருடைய விருப்ப, ஊக்க, அறிவுத் துறைகளும் செயல்வகைகளும் விரிவு பெற வேண்டும்.

பழைய நூல்களன்றிப் புதிய நூல்களையும் படிக்கவேண்டும்; அவை எல்லாம் போற்றத்தக்கனவாக இரா எனினும், அவை இன்னவென்றும் இன்ன பொருளைக் கூறுகின்றனவென்றும் அறிந்திருக்கவேண்டும். தமிழ் நூல்களன்றி, பிற மொழி நூல்களையும் இயன்றவரையில் அவ்வம்மொழியிலும் இன்றேல் மொழிபெயர்ப்புகளின் வாயிலாகவும் படித்தறியவேண்டும். நூலறிவன்றி பட்டறிவையும் பெருக்கிக்கொள்ள வேண்டும். மாணாக்கருடனும்

மற்றவருடனும் அவரவர் அறிவுத்துறைக்கேற்ப பழகத்தக்க நிலையிலிருந்தாலே அவர்களுடைய மதிப்பைப் பெறலாம். மதிப்பைப் பெற்றாலே தமிழுக்கும் மதிப்பளித்துத் தமிழ்க் கல்வியைத் தக்க முறையில் பரப்பக்கூடும்.

## 17. பலவகைத் தொல்லைகள் : சிறுவகை.

காலவரைக்குள் திட்டத்தில் கண்ட பாடங்கள் அல்லது புத்தகத்திலடங்கிய பாடங்களை முடிக்க வேண்டிய தொல்லையும், வாரந்தோறும் கட்டுக்கட்டுகளாகக் கட்டப்பட்ட கட்டுரைப் புத்தகங்களைப் பார்வையிட்டு மாணாக்கர் எழுதியவற்றைத்திருத்தும் தொல்லையும் மற்றொருவகைத் தொல்லைகள்.

'இங்கிலீஷுக்குப் பத்துப் 'பீரியடு'கள் கொடுத்திருக்கையில் தமிழுக்கு மாத்திரம் ஐந்து 'பீரியடு'கள் கொடுத்திருந்தால் ஆண்டுப் பரீக்ஷைக்கு முன் எப்படிப் புத்தகத்தைச் சொல்லிக் கொடுத்து முடிக்கமுடியும்' என்று கேட்கிறார் ஆசிரியர். அவர் கேட்பதில் உண்மை இருக்கிறது; இங்கிலீஷுக்கு இரண்டத்தனை 'பீரியடு'கள் கொடுக்கப்பட்டதற்கும் முன்காலத்தில் நியாயம் இருந்தது; இப்போது இல்லை. இங்கிலீஷ் 'முதல் மொழி'யாகவும் பிற பாடங்களின் கற்பிக்குமொழியாகவும் இருந்த காலத்தில் அதிக 'பீரியடு'கள் தேவையாயிருந்தன. இப்போது தமிழ் 'முதல் மொழி'யும், பிற பாடங்களின் கற்பிக்கு மொழியும் ஆகிவிட்டபடியால், தமிழுக்கு அதிகப் 'பீரியடு'கள் கொடுக்கப்படவேண்டும் சிலவிடங்களில் தலைமையாசிரியர்கள் இம்மாறு

பாட்டை உணர்ந்து காலப்பிரிவினையை மாற்றி யமைத்திருக்கிறார்கள்; மற்றவரும் இதை விரைவில் உணர்ந்து அப்படியே செய்வார்கள் என நம்பலாம்.

ஆனால் இப்படி அதிகமாகக் கிடைக்கும் நேரம் தமிழாசிரியர் 'புத்தகம்' சொல்லிக் கொடுப்பதற்கு அன்று; தமிழ் கற்பிப்பதற்கே. 'புத்தகம்' சொல் லிக் கொடுத்தல் வேறு, தமிழ் கற்பித்தல் வேறு என்பதை இச்சிறு கையேட்டின் முதற்பகுதியில் காணப்படும் அட்டவணையிலிருந்தும் நோக்க விளக் கத்திலிருந்தும் அறியலாம். மொழிப்பயிற்சிகளின் உதவியாலும் கடிதக்கட்டுரைகள் எழுதும் பயிற்சி களினாலும் மாணக்கருடைய தமிழ்மொழித் திறமை யைப் பெருக்குவதற்கே இப்போது அதிகமாக அளிக்கப்படும் நேரம் பயன்படுத்தத்தகும். பிற பாடங்களைத் தமிழில் கற்றுத் தமிழில் கருத்து வெளி யிடத்தக்க அளவிற்கும், மனவெழுச்சிகளை எல் லாம் தமிழில் பொருத்தமாகவும், திருத்தமாகவும், தேவையான உணர்ச்சியோடும் தெரிவிக்கத்தக்க அளவுக்கும் மாணக்கர்களுக்கு இனியாவது திறமை அளிக்கப்படவேண்டும்.

புத்தகத்தை முடிப்பதற்குக் காலம் போதாத காரணம் 'பீரியடு' குறைவன்று; இக்காரணம் வேறொன்று. பழைய முறையில் பதம் பதமாகப் பிரித்துப் பொருளும் இலக்கணமும் சொல்லிக் கொடுத்து வருவதால் விளையும் வீண் காலப் போக்கே அக்காரணம். "இடும்பைகூர் என் வயிறே" என்பதை ஒரு தமிழாசிரியர் வகுப்பில்

மாணவருக்கு 'வியாக்கியானம்' செய்கிறார்:"வயிறே- உதரமே" என்று; "தாலி" என்பதற்கு "மங்கல நாண்" என்று ஒரு புத்தகாசிரியர் அரும்பொருள் கூறுகிறார். மற்றொரு வகுப்பாசிரியர் "அடி—அடியில், கண்டு-சந்தித்து" என்று பொருளைக் கூறிக்கொண்டே, நடுவில் "பெரும்பான்மை, இதற்கு எதிர்ப்பதம் சிறுபான்மை, எழுதிக்கொள்ளுங்கள்" என்றும், "வரிசை வரிசையாக—இது அடுக்குத் தொடர்" என்று சொல்லி, "அடுக்குத் தொடருக்கு உதாரணங்கள் கூறுக" என்று வழிவிலகிப்போய்க் கொண்டே இருக்கிறார்; அதுவும் பிள்ளைகள் தமிழ் படிக்கத் தொடங்கிய எட்டாம் ஆண்டாகும் எட்டாம் வகுப்பில்! இவ்வுதாரணங்களில் நோக்கத்திற்கிசைந்தும், மாணாக்கருடைய அறிவுக்கேற்றபடியும் செலவிடப்படும் காலம் எவ்வளவு? இக்காலத்தினுள் மாணாக்கர் பாடம் தொடங்கு முன் அறிந்திராத புது அறிவோ, பெற்றிராத புதுத் திறமையோ என்ன பெற்றனர்? ஒவ்வொரு 'பீரிய'டிலும் நாற்பத்தைந்து நிமிஷங்களுள் இப்படிக் கழியும் நிமிஷங்கள் எத்தனை? இந்நிமிஷங்களை நோக்கமிணங்கப் பயன்படுத்திக்கொள்ளுதல் எப்படி? இதை அறிந்தால் நேரம் போதாத குறையை நீக்கக்கூடும்.

மரவேலை தொடங்குமுன் தச்சர் உளியைத் தீட்டுகிறார்; நாவிதர் கத்தியைத் தீட்டுகிறார். நமது பண்டிதர் எதைத் தீட்டுகிறார்? எத்தொழிலுக்கும் பொதுப் பயிற்சியும் அன்றாட ஆயத்தமும் அவ

சியம். தமிழ் கற்பிக்கும் தொழில் விதிக்கு விலக்கன்று. பாட ஆயத்தமே நேரத்தைத் தக்க வண்ணம் பயன்படுத்தவும் நோக்கத்தைக் குறைவற நிறைவேற்றவும் ஏற்ற வழி. பாட ஆயத்தம் என்பது என்ன என்பதை ஆசிரியர்கள் இன்று அறிந்திருப்பதை விட இன்னும் பல மடங்கு அதிகமாக அறிந்து அதைக் கடைப்பிடித்து வழங்கவேண்டும்.

பாட ஆயத்தம் என்பது இப்போது வழங்கப்படும் பாடக் குறிப்பெழுதுதல் மாத்திரமன்று. பின்னவை பெரும்பாலும் தலைமையாசிரியருக்குப் பயந்து தானுணராமல் எழுதி, அதிகாரிகளின் ஆண்டுப் பரீக்ஷை முடிந்தவுடன் கைவிடப்படுபவை. பாட ஆயத்தம் என்பது என்றும் இடைவிடாமல் ஆசிரியர் இயற்றும் தொழில்முறையின் முதற்பகுதி. பாடப்பொருள், பாட மொழி, அமைப்பு முறை, மாணாக்கர் அறிவு இயல்புகள் முதலியவற்றை ஆழ்ந்தெண்ணி, குறித்த காலத்தில் ஏற்றுக்கொண்ட நோக்கம் நிறைவேறும்படி பாடமுறையைத் திட்டப்படுத்துதலே பாட ஆயத்தம். எண்ணியவற்றை மறக்காமலிருக்கும்பொருட்டு இம்முறையின் சில பகுதிகளைக் குறித்து வைக்க வேண்டியிருக்கும்; இவற்றை ஆயத்தக்குறிப்புகள் எனலாம். ஆயத்தத்தைப் பின்பற்றி நடைபெறும் பாடம் வழியறிந்து நடக்கும் வழிப்போக்கன் செலவைப்போல திசையறிந்து காலமுணர்ந்து நடைபெறும்.

ஆயத்தமுறையின் பொதுத்தன்மையையும் பல பிரிவுகளையும் விளக்கும் நூல்கள் தமிழிலும் இரண்

டொன்று வெளிவந்துள்ளன; ஆதலால் அவற்றை இங்குக் கூறத் தேவையில்லை. அந்நூல்களில் காணப்படாததும், தமிழ்ப் பயிற்றுமுறையின் இன்றைய நிலைமைக்குத் தேவையானதுமான ஒரு கருத்தை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். அதாவது பாட நிகழ்ச்சியில் ஆசிரியருக்கும் மாணாக்கர்களுக்கும் இடையில் அமையத்தக்க தொழிற் பாகுபாடு.

தமிழாசிரியர் மாத்திரமேயன்றி மற்றும் சில ஆசிரியர்களும் பாடம் கற்பிப்பதன் முழு முயற்சியும் தமதாகவே இருக்கவேண்டும் என்ற தவறெண்ணம் கொண்டிருக்கின்றனர். ஆனல் உண்மையில் பாடம் கற்பிக்க ஆசிரியர் படும் பாட்டின் பெரும் பகுதி அவருடைய ஆயத்தத்தில் அடங்கியதாகும். வகுப்பின் பாடம் நடைபெறும்போது வெளித் தோன்றும் முயற்சியின் பெரும் பகுதி மாணாக்கருடையதாக இருக்கவேண்டும். அன்றியும் ஆசிரியர் ஆயத்தத்தைப் போலவே மாணாக்கரிடமும் ஒரு வகையான ஆயத்தம் தேவையாகும். எனவே, ஆசிரியர் தாம் கற்பிக்கப்போகும் பாடங்கள் எல்லாவற்றையும் கவனித்து அவற்றின் எவ்வெப் பகுதிகள் மாணாக்கருடைய சுய முயற்சியினல் கற்கத்தக்கவை எனத் திட்டம் வகுக்கவேண்டும். அப்பகுதிகளை மாணாக்கர்களுடைய சுயமுயற்சிக்கு விடவேண்டும். சுயமுயற்சியின் பயனைப் பரீக்ஷிக்கவும், அம்முயற்சியினின்றும் ஆசிரியர் கற்பிக்கும் பகுதிகளுக்குத் தொடர்புண்டாக்கவும் தேவையான சோதனைக் கேள்விகளை மாத்திரம் ஆசிரியர்

தமது ஆயத்தக் குறிப்புகளுள் எழுதி வைத்துக் கொள்ளலாம். இதனால் விளையும் காலச் சிக்கனம் ஒருபுறமிருக்க, வகுப்பிலும் மாணாக்கருடைய கூட்டுறவும் சுயமுயற்சியும் ஊக்கமும் பெருகும். இச்சுய முயற்சியிலடங்கியவை: பாடங்களை முன்னதாகக் கண்ணோட்டமாக வாசித்திருத்தல், அகராதி, முதல் நூல் முதலியவற்றின் ஆராய்ச்சி, கட்டுரைக் குறிப்புகள் தயாரித்தல், பிறபாடப் பொருள் மொழிகளுடன் ஒப்பிடும் பயிற்சிகள் முதலியனவாகும்.

இத்தலைப்பின் தொடக்கத்தில் கண்ட கட்டுரைத் திருத்தத் தொல்லையைத் தனியாக ஆராய்வோம்.

## 18. கட்டுரைத் திருத்த முறை

மாணாக்கருடைய கட்டுரைகளைத் திருத்துவதில் ஆசிரியருக்கு முதலாவதாக அருவருப்பளிப்பது அவர்களின் கையெழுத்து. ஆகவே கையெழுத்தின் அமைப்பில் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டும். இதற்கேற்ற முறைகள் முன் பகுதிகள் ஒன்றில் விளக்கப்பட்டிருக்கின்றன. கீழ் வகுப்புக்களில் இவ்விஷயத்தில் கவனக்குறைவினால் ஏற்பட்டு மேல் வகுப்புக்களில் காணப்படும் எழுத்துக் குறைகளைத் தம்மால் கூடுமானவரையில் மேல் வகுப்பு ஆசிரியர்கள் நீக்க முயலவேண்டும். முன்பு கூறப்பட்டுள்ளபடி ஆசிரியருடைய கையெழுத்து மாணாக்கர்களுக்கு ஓர் உதாரணமாக இருக்க வேண்டும் என்ற முறை மற்றெல்லா முறைகளிலும் சிறந்ததாகும்.

மாணக்கர்களுடைய கையெழுத்து தெளிவுற்ருல் எழுத்துப் பிழைகளும் தாமாகவே குறையும். ஓரளவில் மாணக்கர்களே எளிதில் பிழைகளைத் திருத்திக்கொள்ளுவர்; எஞ்சியவற்றில் சில பிழைகளை அவர்கள் மறுமுறை வாசித்துத் திருத்திக் கொள்ள இயலும். அவற்றிலும் மிகுந்தவற்றை மாத்திரமே ஆசிரியர் திருத்தவேண்டியிருக்கும்.

அன்றியும் புதுச் சொற்களைக் கற்பிக்கும் போது அவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி விளக்கும் பழக்கம் கொண்டிருப்பாராளுல், பிழைகள் அதிகமாக நேருவதற்கே இடமிராது. சில ஆசிரியர்கள் ஐயந்தரத்தக்க சொற்பட்டிகளைத் திருத்தமாகத் தயாரித்து அச்சிட்டு மாணக்கர் கட்டுரை எழுதும்போது அவற்றை உபயோகித்தும் பிழை விலக்கச் செய்வதுண்டு. மொழிப் பயிற்சியானது தக்க முறைகளில் நடைபெற்றிருந்தால் கட்டுரைகளில் எழுத்துப் பிழைகளே காணப்படக் கூடாது. எழுத்துப் பிழைகளைத் திருத்தவேண்டிய பயிற்சி சொல்வதெழுதல். இப்பயிற்சி சரிவர நடைபெற்ருல் கட்டுரைகளிலும் இவ்வினையைக் கலக்கத் தேவையிராது. ஆகவே மொழிப் பயிற்சியும் சொல்வதெழுதலும் சரியாக நடத்தப்படுவதால் கட்டுரை எழுதும் பயிற்சி நோக்கஞ் சிதருமல் நிறைவேறக் கூடும்; கட்டுரைத் திருத்தலிலும் ஆசிரியர் பிறநோக்கங்களுக்குக் கவனம் செலுத்தத்தேவையில்லை.

இன்னும் பல ஆசிரியர் கருதுகிறபடி கட்டுரை திருத்தல் கட்டுரையில் காணப்படும் எழுத்துப்

பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் மாத்திரம் திருத்துதல் அன்று. முறைப்படி கற்பிக்கப்பட்ட வகுப்பின் மாணவர்களுடைய கட்டுரைகளில் புதிதாகக் கற்ற சொற்களிலும் இலக்கணத் தொடர்களிலுமன்றி வேறு எழுத்திலக்கணப் பிழைகளுக்கு இடமே இருக்கலாகாது. இவற்றி லும் கட்டுரையில் வழங்கப்போகும் புதுச் சொற் களைக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதிவைப்பா ராயின் இவ்வெழுத்துப் பிழைகளுங்கூட நேரா.

உண்மையில் கட்டுரையில் திருத்தத்தக்க பகுதி கள் பொருள் வரிசைப் பொருத்தத்தில் குறைகள், பொருளுக்கும் சொல்லுக்கும் பொருத்தம் விளங் காத குறைகள், உணர்ச்சியை வெளியிடும் மொழி யின் குறைகள் முதலியனவே. இலக்கணப் பிழை கள், எழுத்துப் பிழைகளைக் கட்டுரைகளில் திருத்து வதால் மாத்திரம் அவை திருந்துதல் அரிது. கட்டு ரைக்குரிய பிழைகளைத் திருத்திக் காட்டிவிட்டு, எழுத்திலக்கணப் பிழைகளில் பொதுவானவற் றைக் குறித்துக்கொண்டு அவைகளுக்கு மொழிப் பயிற்சிகளின் மூலமாகத் தனிப் பரிகாரம் தேட வேண்டும்.

பிழையின்றி எழுதுதல் கட்டுரை எழுதுதலின் பல நோக்கங்களில் ஒன்றேயாகும். பொருளை அழுத்தமாகவும், கோவையாகவும், உணர்ச்சி யோடும் வெளியிடும் கட்டுரைகள் சிறு பிழைக ளுடன் காணப்படினும் அவை, பிழையற்றிருந்தும் பொருள் மெலிந்து தோன்றும் கட்டுரைகளையும், அமைப்புக் குழைந்த கட்டுரைகளையும் விட மேலா

னவை எனக் கருதலாம். எனவே கட்டுரைகளைத் திருத்துவதிலும் மதிப்பிடுவதிலும் ஆசிரியர்கள் அவற்றின் உணர்ச்சியைக் கவனிக்கவேண்டும்.

கட்டுரையின் நீளம் வரையறுக்கப் பட்டிருக்க வேண்டும். நீளம் வரையறுக்கப்பட்டும் முன் பக்கங்களில் ஒன்றில் கூறப்பட்டபடி வகுப்பில் உரையாடிப் பொருள் வகுக்கப்பட்டும் எழுதப்படும் கட்டுரைகள் திருத்துவதற்குத் துன்பம் தரா. இவற்றின் நீளம் பொருளுக்கும் வகுப்புக்கும் கட்டுரையின் சிறப்பு நோக்கத்திற்கும் ஏற்றபடி வரையறுக்கப்படவேண்டும்.

வகுப்பொழிந்த வேளைகளில் பயிற்சிகளைத் திருத்தாமல் இருந்துவிட்டு, அவற்றை வகுப்புக்குக் கொண்டுவந்து ஒவ்வொருவராக மாணக்கர்களைத் தம்து மேசைக்கருகில் அழைத்துப் பயிற்சியைத் திருத்தும் முறை விரும்பத்தக்கதன்று. இந்த முறையினால் மாணக்கர் தனித்த கவனம் பெறுகிறார்கள் என்பது போலியே. இதன் விளைவு வகுப்பு நேரம் வீணாவதுதான். மெய்யாக மாணக்கர் தனித்த் கவனம் பெறுவதில்லை. இம்முறையானது ஆசிரியர் கட்டுரை திருத்தும் சுமையைக் குறைக்க முயலும் ஒரு கோணல் வழி என்றே கருதத்தகும். வகுப்பொழிந்த வேளைகளில் திருத்திய கட்டுரைகளில் பலவற்றிற்குப் பொதுவாகக் காணப்படும் பிழைகள் எவையேனும் இருந்தால், அவற்றை வகுப்பில் எடுத்துச் சொல்லி, அவை இனிமேல் நிகழாதிருக்கத்தக்க வழிகளைக் கூற

லாம்; அதற்கேற்ற மொழிப்பயிற்சிகளையும் அளிக்கலாம்.

கட்டுரைகளை மதிப்பிடுவதற்குச் சில ஆசிரியர்கள் ஒருவகை 'மார்க்கு'ப் பாகுபாட்டை அனுசரித்து வருகின்றனர். மொத்தம் 10-மார்க்கு என்றால் பொருளுக்கு 3-மார்க்கு, நடைக்கு 3-மார்க்கு, பிழையின்மைக்கு 2-மார்க்கு, கையெழுத்து முதலிய தோற்றத்தன்மைகளுக்கு 2-மார்க்கு என வகுப்பார்கள். தம்முடைய மார்க்குப் பதியும் புத்தகத்தில் மொத்தம் கூட்டிப் பதிந்தாலும் மாணாக்கருடைய கட்டுரைப் புத்தகங்களில் ஒவ்வொரு பகுதிக்கும் இத்தனை மார்க்கு என்று குறிப்பிடுவர். இது எல்லா ஆசிரியர்களும் பின்பற்றத்தக்க ஒருமுறை. மாணாக்கர் தத்தம் குறைகளை உணர்ந்து தமது திறமையைப் பெருக்கிக்கொள்ள உதவும்.

## 19. வருங்காலத் தமிழ் நிலைமை

தமிழுக்கு நல்ல காலம் பிறந்திருப்பதைக் கண்ணிருப்பவர் காணக்கூடும். இந்த நல்ல காலத்தைப் பத்திரிகை ஆசிரியர்களில் சிலரும், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள் நீங்க மற்றப் புத்தக ஆசிரியர்களில் சிலரும், தமிழ் நூல்கள் வெளியிடுவாருள் முற்போக்குள்ள சிலரும் உணர்ந்துவருகின்றனர். சினிமாக்காரர்களிடம் தமிழுக்குதவக்கூடிய சிறந்த கருவி இருந்தும் அதன் பயனை நல்ல முறையில் தமிழ்நாடு இன்னும் பெறவில்லை; ஆனால் எதிர் காலத்தில் பெறக்கூடும். பள்ளிக்கூடங்களிலுள்ள

தமிழாசிரியர்களை மாத்திரம் இந்த நல்ல காலம் முற்றிலும் நெருங்கினதாகத் தோன்றவில்லை. ஆயினும் ஓரளவில் அவர்களுக்கும் இந்நற்காலம் வந்திருக்கிறது எனக்கூடும். ஏனென்றால் தமிழ் மொழி முதற்பாடம் என்ற பதவியைப் பெற்றுவிட்டதன்றோ? பெயரளவில் நிற்கும் இந்நற்காலத்தைச் செயலுருவத்தில் பெறுதல் இனி ஆசிரியர் முயற்சியைப் பொறுத்ததாகும்.

தமிழ்நாட்டில் இன்று வளர்ந்துள்ள தமிழ்ப்பற்றை நோக்குங்கால், காலப்போக்குக்கேற்பத் தொழில் நடத்தும் ஆசிரியர் எதிர்காலத்தைப்பற்றி அஞ்சுவதற்கு இடமில்லை. காலத்திற்கேற்பக் கல்வி முறையும் பள்ளிக்கூட நடைமுறையும் முன்னேறத் தயங்கினாலும், 'சரக்கு'ள்ள தமிழாசிரியரைத் தமிழர் ஆதரிப்பர். நாட்டுக்குழப்பத்தின் பயனாகவும், பள்ளிக்கூட ஆசிரியர்கள் நிராகரிக்கப்படுவதன் விளைவாகவும் பள்ளிக்கூடங்களே அழிந்துபோனாலும் இன்று தமிழுக்கு ஏற்பட்டுள்ள பெரும் மதிப்பு இனிமேல் குன்றாது. பள்ளிக்கூடங்கள் அழிந்தாலும் தமிழ்க் கல்வி அழியாது; புத்தகங்களின் மூலமாகவும், ஒலிபரவியின் உதவியாலும், சினிமாவின் துணையாலும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க முயலுவர். அப்போதாவது தமிழாசிரியர்கள் தேடி அழைக்கப்படுவார்கள். ஆகவே பள்ளிக்கூடங்களின் நிலைமை, தமிழ்ச் சமூகத்தின் நன்மை இவ்விரண்டில் எது முன்னேற்றமடைந்தாலும் அம்முன்னேற்றத்தில் ஆசிரியர்கள் ஈடுபட ஆயத்தமாயிருக்கவேண்டும். அப்படி ஆயத்தமாயிருப்பவர்

களிடம் இன்று முதலே முன்னேற்ற மனப் பான்மை தேவை.

இன்றைய உலகம் வர்த்தகம் பெருத்த உலகம். தமிழாசிரியருடைய ஊதியம் உயரவேண்டுமானால் விண்ணப்பத்தாலும் வேண்டுகோளாலும் உயராது; வர்த்தக முறைகளைக் கைக்கொண்டால்தான் உயரும். வர்த்தக முறையில் 'சரக்கு'க்குக் 'கிராக்கி' உண்டானால் விலை ஏறும். 'கிராக்கி' உண்டாக்குவது 'சரக்'கின் தன்மையை உயர்த்துவதாலும் விளம்பர முயற்சிகளாலும் கைகூடத்தக்கது. 'சரக்'கின் தன்மையை உயர்த்தும் முறைகளில் சில இச்சிறு கையேட்டில் கூறப்பட்டுள்ளன. விளம்பர முயற்சியானது 'சரக்'கின் தன்மையை உயர்த்துவதைப் பொறுத்திருக்கும்; அத்தன்மையை வெளிப்படக் கூறுதலே விளம்பரம். வர்த்தக விளம்பரத்தில் வழங்கப்படும் அச்சுப்பிரதி, படவிளக்கம், யந்திரத் துணை முதலிய கருவிகளே கல்வி விளம்பரத்திற்கும் பயன்படும்.

வர்த்தக முறைகளில் மற்றொன்று தொழில் வகைத் தொகுப்பு. இதை 'ஆர்கனிஸேஷன்' என்பார்கள். தமிழாசிரியர் தனியாகத் தம்மிலும் பிற ஆசிரியர்களுடன் கலந்தும் தமது தொழிலைத் தொழில்வகைத் தொகுப்பில் தொகுத்துக்கொள்ள வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு."

## 20. முடிவுரை: எங்கள் "குயில் ஐயா"

இச்சிறு கையேட்டை முடிக்கையில் "எங்கள் 'குயில் ஐயா'வை நினைக்காமலிருக்க முடியவில்லை. அவருடைய மெய்ப்பெயரைச் சொன்னால் 'குயில் ஐயா' என்ற சொல்லின் இனிமை மறைந்துவிடக் கூடும்; அன்றியும் அப்பெயரை ஒருவரும் வழங்கின ரில்லை. அவருடைய இனிய பேச்சைப் பொறுத்து அச்செல்வப் பெயரை அவர் பெற்றார். மற்ற ஆசிரி யர்கள் 'நாகூர் கடா,' 'அரிசி மூட்டை,' 'அவரை வற்றல்' என்ற பெயர்களைப் பெற்ற பள்ளிக்கூடத் தில் அவர் பெற்ற பெயரே அவருடைய பெருமை யையும் மாணாக்கரிடம் பெற்ற அன்பையும் விளக் கும்.

'குயில் ஐயா' பாடம் சொல்லும்போது வகுப் பறை வாசலுக்கு வெளியில் அவருடைய குரலைக் கேட்கமுடியாது. வகுப்பறைக்குள்ளே ஒவ்வொரு மாணவரும் அமைதியுடன் அவர் சொல்லுவதைக் கேட்பர்; இட்டதைச் செய்வர். அவர் பாடம் சொல் லிக்கொண்டே இருக்கமாட்டார். மாணாக்கரும் அவ ருமாகக் கலந்து பாடம் கற்பதைப்போன்றிருக்கும் அவருடைய தமிழ் வகுப்பு.

அறிவில் அகராதியையும், நிகண்டையும், செய் தித்தாளையும் கரைத்துக் குடித்தவர் போன்றவர்; ஆனால் தோற்றத்தில் அப்படிக் காணப்படமாட் டார். எந்தப் பாடத்தில் ஐயம் தோன்றினாலும் அவ ரைக் கேட்கலாம்; பெரும்பாலும் விடையைச் சொல்லமாட்டார்; ஆனால் விடையை எப்புத்தகத்

தில் எங்குக் காணலாம் என்று சொல்லுவார். இரவீந்திர நாதர் படத்தை 1913-ஆம் ஆண்டில் தமிழ் வகுப்பில் கொண்டு வந்து காட்டி, அப்புலவடு நோபெல்' பரிசு பெற்றதைச் சொல்லி, கீதாஞ்சலியைப் படிக்கச்சொன்னார். ஐயர்லாந்தின் விடுதலை இயக்கத்தையும், இங்கிலாந்தில் பெண்ணுரிமைக் கிளர்ச்சியையும்பற்றி மாணாக்கர்களைக் கட்டுரைப் பொருள் தேடவைப்பார். இங்கிலாந்தில் டபிள்யூ. டி. ஸ்டேட் என்பவர் வெளியிட்டுவந்த ரேவ்யூ ஆப் ரேவ்யூஸைக் கொண்டுவந்து அதிலுள்ள தேசீய உருவப் படங்களை விளக்குவார். இந்த ஸ்டெட் என்பவர் டிட்டானிக் கப்பல் கடலில் மூழ்கியபோது உயிரிழந்த செய்தியையும் மறுநாள் தெரிவித்தார்.

பள்ளிக்கூட நாடகங்களுக்கு சூத்திரதாராயிருப்பார். ஒவ்வொரு நடிகரையும் நன்றாகப் பழக்குவார். அவரவர் வேஷத்திலுள்ள முரண்பாடுகளைக் களைவார்; வேஷங்களைப் பொருத்தமாக்குவார். பாத்திரத்திற்கேற்ற பேச்சைச் சொல்லிக்கொடுப்பார். ஒரு குண்டூசியையும் மறக்காமல் பொருளைச் சேர்த்து வைத்திருப்பார். நாடகம் முடிந்ததும் அக் குண்டூசியையும் விடாமல் திருப்பிச் சேர்த்துவிடுவார்.

அவரே சில நூல்களை இயற்றி வெளியிட்டார். நளச்சக்கரவர்த்தி என்ற நாடகம் முதல் எல்லாம் ஒன்றே என்ற தத்துவ ஆராய்ச்சிவரை அவற்றின் பொருள்கள் தழுவியிருந்தன. அந்நூல்களில் ஒரு அச்சுப் பிழையையாவது காணுவதற்கில்லை.

அச்சைப்போல் எழுதுவார்; மாணக்கர்களையும் அவ்விதமே எழுதச்செய்வார். அச்சுப்பிரதியில் காணப்படும் எல்லாத் தன்மைகளையும் மாணக்கர் கட்டுரைகளில் ஆங்கில மொழிப் பாடங்களில் கற்ற இலக்கிய விதிகளையும் பள்ளிக்கூடத்திலே தமிழ்ப் பாடத்தில் கற்றுக்கொடுத்திருந்தார்.

‘குயில் ஐயா’வின் பாடம் எப்போது வரும் என்று எதிர்பார்த்திருப்பார்கள் மாணக்கர்கள்.